விலை ரூபா 5.00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இளை நூலகம்

ஈழநாடு
வார மலர்

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 28 இதழ் 127
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 11 – 6 – 1995

## போலி பட்ட சான்றிதழ்; கொழும்பில் அச்சடிப்பு!

(கொழும்பு)

போலி பட்டதாரி பட்ட சான்றிதழ்களை அச்சடித்து பல ஆயிரம் ரூபா பணத்திற்கு விற்பனை செய்து வந்தவர்கள் கொழும்பில் பொலிசாரிடம் சிக்கியுள்ளனர்.

பேராதனை பல்கலைக்கழக சின்னத்தையும் அதன் துணைவேந்தரின் கையெழுத்தையும் போலியாக தயாரித்து இந்த சான்றிதழ்களை அச்சடித்து ஒவ்வொன்றும் தலா ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு விற்று வந்த அச்சகமொன்றை மருதானையில் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

(10-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் சுப்பசொனிக் தாக்குதல்

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்கு குடாரப்புப் பகுதியில் சுப்பசொனிக் நடத்திய திடீர் தாக்குதலால் வயோதிப மாதுஒருவர் வலது கையில் படுகாயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் மாலை 6. 30 மணியளவில் இடம்பெற்றது.

பேரிரைச்சலுடன் வந்த சுப்பசொனிக் குடாரப்பு பகு

(10ம் பக்கம் பார்க்க)

பொசன் போயாதினம்

## அனுராதபுரத்தில் 5000 பொலிஸார் குவிப்பு

(கொழும்பு)

அநுராதபுரம் - மிகிந்தலை பகுதியில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பொலிஸார் நவீன ஆயுதங்கள் தரித்த நிலையில் குவிக்கப்பட்டுள்ளனர்.

நாளை திங்கட்கிழமை மிகிந்தலையில் நடைபெறும் பொசன் போயாதின வைபவத்தை

[10-ம் பக்கம் பார்க்க]



வீரமும், ஈகமும், சீலமும், முயற்சியும் நிறைந்த வாழ்விற்காக கல்வி கற்று ஒரே கொடியின் கீழ் எழுச்சி கொள்ளும் மாணவர் பேரணி படம்: தேவா

## ★ கொழும்பில் குண்டு வெடிப்பு தொடர்கிறது

# பாதுகாப்பில் பெரும் ஓட்டை

# அரசியல் தலைவர்கள் அச்சம்

## நடமாட்டமும் குறைப்பு

(கொழும்பு)

கொழும்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மிகத் தீவிரமான பாதுகாப்பையும் மீறி குண்டு வெடிப்புகள் தொடர்ந்து நடைபெறுவதால் பாதுகாப்பில் பெரும் ஓட்டை ஏற்பட்டுள்ளதாக கருதப்படுவதாகவும் இதனல் அரசுத் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் பெரும் அச்சமடைந்திருப்பதாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

கடந்த ஒரு வாரத்தில் கொழும்பின் மிக முக்கிய பகுதிகளில் பலத்த பாதுகாப்பிற்கும் மத்தியில் இக்குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. இத்தாக்குதல்கள் அரசுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கையாகவே கருதப்படுகிறதாம்.

தினமும் பாதுகாப்பு நடவடிக்கை குறித்தும் குண்டுத் தாக்குதலுக்கு திட்டமிடப்பட்டுள்ளதாக புலனாய்வுத் துறையினர் எச்சரித்தும் வருகின்ற இந்நிலையில் இக்குண்டு வெடிப்புகள் நடைபெற்றுள்ளமை பாதுகாப்பில் பெரும் ஓட்டை ஏற்பட்டுள்ளதாகவே கருதப்படுகிறதாம்

இதையடுத்து அரசுத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் பெரும் அச்சமடைந்திருப்பதால அவர்களின் பாதுகாப்பு பெருமளவில் அதிகரிக்கப்பட்டு அவர்களின் நடமாட்டமும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

-சி

## நீரிழிவு நோய்க்கு மருந்து கண்டுபிடிப்பு!

(வாஷிங்டன்)

நீரிழிவு நோய்க்கு புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சில அமெரிக்க அறிவியலாளர்கள் கூறியுள்ளனர்

புளொறிடாவில் பணிபுரியும் சில விஞ்ஞானிகள் ஆய்வு சாலையில் உள்ள சுண்டெலியில் காணப்பட்ட நீரிழிவு நோயை குணப்படுத்தி விட்டதாகவும் இந்த முறையை மிகுந்த கவனத்துடன் மனிதர்களிலும் பிரயோகித்து வெற்றி பெறலாமென தாம் நம்புவதாகவும் அட்லான்ரா நகரில் நடைபெறும் அமெரிக்க நீரிழிவு நோய் அமைப்பின் கூட்டத்தில் கூறியுள்ளனர்.

சுண்டெலியின் உடலிலிருந்து 'இன்சுலினை' சுரக்கும் சுரப்பி அணுக்களை பிரித்தெடுத்து பரிசோதனைசாலையில் தனிப்பட்ட முறையில் வளர்த்து அவைகளை இன்சுலின் சுரக்கவைத்து மீண்டும் அவற்றை சுண்டெலியின் உடலில் பொருத்தியபோது அவை அங்குநன்றாக வளர்த்து இன்சுலின் சுரந்ததில் எலியின் நீரிழிவு நோய் முற்றாக குணமாகிவிட்டதை கண்டனர்.

இதையடுத்து இந்த விஞ்

(10ம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் நூற்றுக்கணக்கில் தமிழர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமானநிலைய குண்டுவெடிப்பு சம்பவத்தின் பின்பு. கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் கைதுசெய்யப்படும் சம்பவங்கள் தினமும் அதிகரித்துவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு கோட்டை, மருதானை ரயில் நிலையங்களில் தமிழர்கள்பெருமளவில் கைது செய்யப்படுகின்றார்கள். அத்துடன் கொழும்பிலுள்ளவீதித் தடைகளில் பஸ்வண்டிகளையும் மற்றும் வாகனங்களையும் மறித்து சோதனையிடும் படையினர், தமிழர்கள் என்றால் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்கள் என்றால் அவர்களைக் கடுமையாக விசாரணைசெய்கிறார்கள் சிறிது சந்தேகம்

(10ம் பக்கம் பாக்க)

★ திருமண முகூர்த்த பட்டுப்பிடவைகளின் வண்ணக் களஞ்சியம். அதி அற்புதமான புதுப்புது டிசைன்களை தெரிவு செய்ய நாடுங்கள்.

இளவரசி சேலைசோலை

57, சிறப்பு அங்காடி
( உள்புறம் ) யாழ்ப்பாணம்.

(ஏ-4990)

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கணமாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப் பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1489)

### சனிமாற்றமும் வியாழவக்கிரமும்

4-8-95 வரை வியாழ வக்கிரம், 9 - 8 - 95 மீண்டும் சனி (வக்கிர) மாற்றமும் எல்லா ராசிப் பலன்கள் ரூ.10/-ராசதுரை ஸ்ரோர்ஸ், இருபாலைச்சந்தி. (சி-1515)

### மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு அ-மி வித்தியாலய இல்லமெய்வல்லுநர்போட்டி- இன்று 11. ம் திகதி ஞாயிறு பி.ப. 5-00 மணிக்கு யாழ்ப்பாணம் கில்னர் ஒழுங்கை செட்டித் தெரு-மெ-மி-பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

இலங்கை

**பட்டப்பின் டிப்ளோமா பொது நிர்வாகம் முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 1994**

பட்டப்பின் டிப்ளோமா பொது நிர்வாகம் முதலாம் அரையாண்டுப் பரீட்சை 26 - 06 - 95 தொடக்கம் 30-06-95 வரை நடைபெறவுள்ளது. பரீட்சை அனுமதி அட்டைகளை யூன் 21, 22, 23 ஆம் திகதிகளில் அலுவலக நேரத்தில் பரீட்சைக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்

பரீட்சைக் கிளை
1995-06-09.

(ஏ-4994)

---

# தில்லையம்பதி ஸ்ரீசிவகாமி துணை

அர்த்த நாதீஸ்வரர் தோற்றம் அறிவூட்டும் ஆலரசு;
ஆலரசு தனிலே அழகான சிறு பொந்து;
பொந்தின் வழி நோக்க புலப்படும் பொக்கிசம்;
பொக்கிசம் என்னவெனில் சிவகாமியின் சிகரம்.


ஆக்கம்:
அம்பிகைக்குரியவன்

**இன்று கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்மன் தேர்த்திருவிழா**

(சி- 1511)

---

# 9-ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தையா வேலுப்பிள்ளை

(முன்னாள் யாழ் மாவட்டத் தொலைத்தொடர்புப் பொறியியலாளர்)

| தோற்றம்: | மறைவு: | திதி: |
|---|---|---|
| 17-02-1940 | 21-05-1986 | 11-06-1995 |

அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே! பாசத்தின் இருப்பிடமே! குடும்பத்தின் குலவிளக்கே! எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தந்தையே! நீங்கள் எம்மைப் பிரிந்து இன்றுடன் ஒன்பது ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டாலும் உங்கள் அன்புமுகம் ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் மறையவே மறையாது. தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"வேல் அகம்,"
குருக்கட்டு,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(சி-1514)

---

உணவிற்காய் பயிரிடுவோம்
எம் ஈழத்தை உயர்த்திடுவோம்.

---

## இன்று

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி கலைநகர் மாதர் சங்க அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த விளையாட்டு விழா பாடசாலை மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தலைவர் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வலிமேற்கு பிரதேச செயலர் திரு. சா. சந்திரராசா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். [139]

ஃ ஃ ஃ

(நெல்லியடி)

யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் அமரர் துரைராஜாவின் முதலாம் ஆண்டு நினைவு தினமும் படத்திரை நீக்கமும் இன்று 11ம் திகதி ஞாயிறு காலை 11 மணிக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் அதிபர் க. நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. 160

ஃ ஃ ஃ

(கொழும்புத்துறை)

உரும்பிராய் ஸ்ரீ பர்வதவதனி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் தேர் திருவிழா இன்று 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கும் நாளை திங்கள் பூரணை தினத்தன்று காலை 9 00 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். 124

---

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-06-11

ஞாயிறு இரவு

08-02 பேராசிரியர் அ துரைராசா அவர்கள் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "மண்ணிற்காக வாழ்ந்த மாமனிதர்"
08-20 தாயகப் பாடல்கள்
08-30 செய்திகள்
08-40 தொடர் நாடகம்—கருணை ரவி எழுதும் "காணி நிலம் வேண்டும்" அங்கம்—13

1995-06-12

திங்கள் காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-06-11

ஞாயிறு மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 மழலைகளுக்காக
05-30 கதம்பம்
06·00 சிந்தனைக்கு சிலவிநாடிகள்
06-02 உங்கள் தெரிவு
06-30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

---

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

## (ரி. ஆர். ஆர். ஓ.)

ஃ ஆதரவற்ற பெண்கள் உதவித் திட்டத்தில் தயாரிக்கப்படுகின்ற

**வறுத்த கைக்குத்து அரிசி மா**

கிலோ ரூ. 45/-

சுத்தம் உத்தரவாதத்துடன் தற்பொழுது பொலித்தீன் பைகளில் விற்பனையாகின்றது.

கிடைக்கும் இடங்கள்:

**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்**

106, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

| உப காரியாலயம்: | உப காரியாலயம்: |
|---|---|
| கட்டுடை, மானிப்பாய். | மானிப்பாய் வீதி, உரும்பிராய். |

(ஏ-4992)

---

### கோண்டாவில் தில்லையம்பதியில்

## (இன்று) தேர்த் திருவிழா



ராகம்: சுரபி தாளம்: ஆதி

அனுபல்லவி

மாவடியிலே அன்று மாதா
நீ வந்தமர்ந்தாய்
ஆவலாய் அன்பருக்கே அருளை
அள்ளிக் கொடுத்தாய்
சேவடி தொழுதோம் அம்மா—
சிவகாமி
பூவடி பாதமே புகலிடமாய
மைந்தோம்.

ஆக்கம்:
கவிமாமணி ந. வீரமணிஐயர்

இரவு 7-30 மணி
'தாரகாசூரன் தோற்றம்'
என்னும் பொருள் பற்றி

சிவநெறித் தொண்டன்
செ சத்தியமூர்த்தி (ஆசிரியர்)
சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்

(ஏ-4971)

---

சுகாதார முறையில் உணவிற்கும் வைத்தியர்களுக்கும் விசேஷமாக தயாரிக்கப்பட்டது.

# சுத்தமான வி. எஸ். பி. நல்லெண்ணெய்

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்

## பரிமளா ஸ்டோர்ஸ்

26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: திருமதி சிவபாக்கியம் பொன்னுச்சாமி

(ஏ-4989)

# அத்தியாவசிய பொருள் தடையும் சந்திரிகாவின் அவல நிலையும்

சிறிலங்கா அரசு தன் இராணுவ நடவடிக்கையின் ஓர் அம்சமாக வடபகுதிக்கான அத்தியாவசியப்பொருட்களை அனுப்புவதற்கு ஓரள அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கும் போர் காரணமாக அங்கு இடம்பெயர்ந்துள்ள மக்களின் தேவைகளைப்

ச. தியாகராசா

வுக்கு முற்றுமுழுதான தடைகளை ஏற்படுத்தியுள்ளது. கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் யாழ். அரச அதிபர் வடபகுதி மக்களின் பூர்த்தி செய்வதற்கான பொருட்களை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யுமாறு வேண்டியபோதும் ஒருவித அக்கறையும் அவர்கள் காட்டவில்லை. அதிகாரிகள் அக்கறை காட்டாமை என்பது அரசு அவர்களின் பின்னால் நின்று அக்கறை செலுத்தவேண்டாம் என்று உத்தரவிட்டமையையே காட்டுகிறது.

## வார சாரம்

### போர் வெறி

இதன் காரணமாக அரச சார்பற்ற நிறுவனங்களுடன் அரச அதிபர் பேச்சுவார்த்தை செய்து அவர்களின்மூலமாக சிறிலங்கா அரசுக்கு வடக்கிற்கான அத்தியாவசியப் பொருட்கள் சம்பந்தமாக அழுத்தம் பிரயோகிக்க முயற்சி எடுக்கப்பட்டதாம். ஆனல் போர்வெறி கொண்ட சந்திரிகாவும் ரத்வத்தையும் எதற்கும் செவிசாய்க்கமாட்டார்கள் என்பதும் திண்ணம்.

### படை எடுப்பு

கிழக்கு மாகாணத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாது திண்டாடும் சிறிலங்கா அரசு

இரண்டும் கெட்டான் நிலையில் வடக்கை ஆக்கிரமித்து யாழ்ப்பாணத்தைப் பிடிப்போமா என்று ஆலோசிக்கிறது. இதற்கு ரத்வத்தையின் முழு ஆதரவும் உள்ளது. ஆனல் உயர்மட்ட இராணுவத்தினர் மத்தியில் இவ்வித செயல் பயன்தராது, ஈற்றில் இரு பகுதிகளையுமே கோட்டைவிட நேரிடும் என்ற கருத்து நிலவுகிறது.

### தளவிபரம்

இதேவேளை வடக்கைக் கைப்பற்றுவதற்கான திட்டத்தை வகுக்கும் பொறுப்பை வெளிநாட்டுஇராணுவஆலோசகர்களிடம் அரசு ஒப்படைத்ததை இராணுவ உயர்மட்டத்தில் உள்ள இன்னொரு பிரிவினர் எதிர்ப்பதாகவும் தகவல் கிடைத்துள்ளது. யார் திட்டத்தை வகுத்தாலும் போரில் முன்னல் போகப் போவது தாம்தான் என்றும் இலங்கையைப்பற்றிய தளவிபரங்கள் தெரியாதவர்கள் தயாரிக்கும் திட்டத்தை நம்பி தாம் எவ்வாறு முன்செல்வது என்று அவ் உயரதிகாரிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

### நேரடி உதவி

வெளிநாட்டு, குறிப்பாக அமெரிக்க, பிரெஞ்சு, இஸ்ரேலிய இராணுவ ஆலோசகர்களினலேயே யாழ்ப்பாணத்தைத் தாக்குவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளதாம். இவ்வாலோசகர்கள் அறுவர் இஸ்ரேலியர்கள் என்பதுகுறிப்பிடத்தக்கது. இந்தியவெளியுறவு அமைச்சர் பிரணப் முகர்ஜி தனது நாடு சிறிலங்காவின் உள்நாட்டுப்போரில் தலையிடமாட்டாது என்று வெளியுலகுக்குப் பிரபலப்படுத்தியுள்ளார். ஆனல் உண்மை அதுதானு? இல்லை. இந்தியாவும் இஸ்ரேலும் ஈழப்போரில் சிறிலங்காவுக்கு உத்தியோகபூர்வமற்ற வகையில் உதவுகின்றன. தூதராலயம் திறக்கும் பிரச்னை ஒரு பக்கம் இருந்தபோதும் சந்திரிகா இராணுவ உதவி இஸ்ரேலிடம் கோரியபோது அது வழங்கப்படுகிறது. இந்தியா நேரிடையாக அல்லது மறைமுகமாக உதவுகிறது. இராணுவ ரீதியில் இந்தியாவும் இஸ்ரேலும் நெருங்கிய உற

(9ம் பக்கம் பார்க்க)

## கவிமலர்

### உன் கை விலங்கை உடைக்க நாம் வருவோம்!

திருகோணமலைக் கடலில்...அலைகள்
தீந்தமிழாற் கவிதை இசைத்தது ஓர்காலம்!
முற்றவெளியில் நின்று சுற்றிவரப் பார்த்தால்
மனக்கண்முன் தெரிவதெல்லாம்...அந்த
கோணசர் கோயிலும்...குறுகிய ஆலமரமும்...
கோபுரமும்... சுற்றிவரப் பச்சைமரங்களும்தான்!

அன்று.........
மேகம்வந்து சிலவேளை மலைமகளோடு
மோகமுடன் முத்தமிட்டு.. மேனிசிலிர்ப்பாள்...
சிலவேளை தாகமுடன் அம்மேகம்...
கண்ணீரைச் சிந்த ..அந்நீர் ...
மழையாகிப் பொழிந்து...புல்வெளியில் வழிந்து...
கடலோடு சென்று கலக்கும்!

மானும் மந்தியும் கூட்டங்கூட்டமாய் வந்து
மலைகளில் மட்டுமே குதிக்கும்? ..இல்லை!
மக்களின் வீடுகளிலும் அவைவந்து விளையாடும்!
கன்னிமகளின் வெள்ளரிக் கன்னம் போன்ற
கரையோரத்து மணல் மேடுகளில்.........
நண்டுகள் வந்து கிளித்தட்டு விளையாடும்!

வெண்முத்துகள் ஒதுங்கிவந்து கரையினிலே
வண்ணத் தமிழால் வாழ்த்துப்பா பாடும்!
பெருத்த இருகூர் முலைகளுக்கிடையே
போதையினுல் முகம்புதைத்து முத்தமிடும்
காதலன்போல்
இயற்கைத் துறைமுகத்தின் இருமுனையின் நடுவினிலே
சிவப்பு விளக்கோடு, சீமைக்கப்பல்கள் வந்து
நங்கூரமிடும்!

எங்கள் தலைநகரத்து வீதிகளிலெல்லாம்...அன்று
எங்கள் கால்கள் எப்படியெல்லாம் திரிந்திருக்கும்?
இன்று . அந்தமலை உச்சியிலே எத்தனை
பெரிய விகாரை?
அதன்நடுவே...மொட்டைத்தலைகள் எல்லாம்
வட்டமேசை போட்டு...தவளைக்கச்சேரி வைக்கும்
ஓசைதான் தினமங்கே . ஒலிக்கிறதாம்.........!
அம்மா எழுதியிருந்தா.........

கோணேசர் மணியோசை கேட்டு அங்கே...
கனகாலம் ஆகிவிட்டதாம்...
காற்று வருகிறதாம்...ஆனல்கண்ணீரைச் சுமந்தபடி
அலைகள் அடிக்கிறதாம்...ஆனல்...கவிதை பாடியல்ல;
சாவோலம் போட்டபடி!
நண்டு கரைமணலில் படம்கீற வருமாம்...ஆனல்
கால்களில் விலங்கு பூட்டிக்கொண்டு!

முத்துவந்து கரையில் நின்று பார்த்து...
மௌனமாய்ப் பெருமூச்சு விடுகிறதாம்!
என்னருமைத் தாய் நாடே! தலைநாடே!
இன்று...இதுவா உன் நிலை?
நெஞ்சு கொதிக்குதம்மா கேட்க...
தாயே! கலங்காதே!
நிச்சயம் உன்கை விலங்கை உடைக்க...
நாம் வருவோம்!

— கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

## நமது நோக்கு

### யுத்த மேகம்

வடபகுதிமீதான யுத்தத்திற்கு இராணுவம் தயார்படுத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறது. யுத்த தளபாடக் கொள்வனவுகளுக்கு வெளிநாடுகள் சென்ற உயர் இராணுவ அதிகாரிகள் தங்கள் வேலைகளை முடித்துக்கொண்டு திரும்பிவிட்டார்கள். ஆயுதங்கள் கைக்கு வருவதில்தான் தாமதம். அதுவும் விரைவில் வந்துவிடும்.

அரசு யுத்தத்துக்குப் பணம் சேர்க்கும்வகையில் குறைநிரப்பு பிரேரணை ஒன்றை பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. இனப்பிரச்னைக்குத் தன் அரசியல் ஞானத்தையும் சட்டத்துறை நிபுணத்துவத்தையும் உபயோகிப்பதற்காக அமைச்சரவையில் சேர்க்கப்பட்ட இப் பேராசிரியர் போருக்குப்பணம் எவ்விதம் சேர்ப்பதென்பதில் தன் மூளையைப்போட்டு உடைக்கிறூர். அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சுச் செயலாளர்கள், கூட்டுத்தாபனத் தலைவர்கள் போன்றோர் தமது ஒரு மாதச் சம்பளத்தில் ''ஒரு நாள் சம்பளத்தை'' அதுவும் தொடர்ந்து ''நாலு'' மாதங்களுக்கு வழங்கி பெரும் தியாகச் சபதம் எடுத்துள்ளனர். ஆனல் பி. பி. ஸி. தனது கணிப்பில் அரசு யுத்த தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு வெளிநாட்டு உதவியில் பெரும்பகுதியை பயன்படுத்தலாம் எனக் கூறுகிறது.

இதற்கிடையில் லக்ஸ்மன் கதிர்காமரும் தனது பங்கிற்கு விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்வது அர்த்தமற்ற செயல் என்றும் அரசு இராணு ரீதியில் பிரச்னையை அணுகவிரும்புகிறது என்றும் புலிகளுடன் தற்போது இருப்பதாக கூறப்படும் ஏவுகணைகள் காரணமாக முன் சிறிலங்காவின் உள்நாட்டுப் பிரச்னையில் ஈடுபடவிரும்பாத இந்தியாவிடம் இப்போது மனமாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

ஆகவே ஒட்டுமொத்தத்தில் எடுத்துக்கொண்டால் சிறிலங்கா அரசு போர்மூலம் தமிழர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை நசுக்குவதற்கு கங்கணம் கட்டியுள்ளது என்பது வெளிப்படை.

ஆகவே இந்நிலையில் தமிழ் மக்களின் கடமை என்ன? நாங்கள் விடுதலைப் போரட்டத்தில் முக்கால்வாசியைத் தாண்டிவிட்டோம். இனிமேல் விட்டுக்கொடுக்க முடியாது, விட்டுக்கொடுக்கவும்படாது. சகல மக்களும் ஒன்று சேர்ந்து போராட்டத்தில் பங்குகொள்ளுவதே இன்றைய செயற்பாடாக இருக்கவேண்டும். ஆக்கிரமிப்பாளர்கள் விடுதலைப் போராட்டங்களை நசுக்கியது என்பது வரலாற்றில் இல்லை.

# டோக்கியோ நகரை அதிர்ச்சிக்குள்ளாக்கிய ஓம்ஸ்சின்றிக்யோ

டோக்கியோவின்சுரங்க ரயில்களில் தினமும் 60 லட்சம் மக்களுக்குமேல் பயணம் செய்து சன நடமாட்டம் மிகுந்ததாகவிருந்தபோதிலும் அவை சுத்தமாகவும் பாதுகாப்பாகவுமிருந்தது மட்டுமல்லாது இரைச்சலுமில்லாது இருந்த காரணத்தால் பயணம் செய்யும் பலர் சிறிது தூக்கததில் ஆழ்ந்து ஆறுதல் எடுப்பார்கள்.

ஆனல் அங்கு அண்மையில் நடந்த தாக்குதலின் பின்பு நிலைமை மாறிவிட்டது.

டோக்கியோவை நோக்கி காலையில் விரைந்துகொண்டிருந்த ரயில் பெட்டிகளிலிருந்து குளிர்பானப் போத்தல், சாப்பாட்டுப்பெட்டிபோன்ற ஐந்து திரவப் பொதிகளிலிருந்து ''சறின்'' என்னும் நரம்பைத் தாக்கும் நச்சுக் காற்று வெளியேறிக்கொண்டிருந்தது. இதன் தாக்கத்தால் 12 பிரயாணிகள் இறந்தார்கள். 5000 பேருக்குமேல்மருத்துவ சிகிச்சையளிக்கவேண்டியிருந்தது. பலர் பார்வையிழந்திருந்தார்கள்.

இங்கு பாவிக்கப் பட்ட ''சறின்.' எனப்படும் நஞ்சு 1930 களில் திறமான கிருமிநாசினியைத்தேடி ஆராய்ந்துகொண்டிருந்தஜேர்மன்இரசாயனவியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது யூதர்களைப் பாரிய அளவில்இனப்படுகொலை செய்தபோது நாசி ஜெர்மனியர் சறின் நஞ்சை பரீட்சார்த்தமாகப் பாவித்துள்ளார்கள்' சதாம் குசேய்னும் 'குட்ஸ். இனமக்களுக்கு எதிராக இவ் நஞ்சைப்பாவித்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது

டோக்கியோ பொலிசாரின் தேடுதலின்போது ஓம்ஸ் சின்றிக்யோ என்னும் மதக்குழுவினரிடமிருந்து பெருந்திரளான சறின தயாரிக்கும் திரவங்களும் பலகோடி பெறுமதியான தங்கமும் பணமும்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சுரங்கரையில் தாக்குதலை இவர்கள்தான் செய்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்ததை அடுத்து ஓம்ஸ் சின்றிக்கோ உறுப்பினர்கள் பலர் கைதாகிவருகிறூர்கள்.

யார் இந்த ஓம்ஸ்சின்றிக்யோவின் தலைவராகிய அசகாரா என்று பார்த்தால், இவர் சிறுவயதில்கண்பார்வை மிகக் குறைவாகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவராகவுமிருந்துள்ளார் 6 வயதில் கண்தெரியாதபிள்ளைகள் படிக்கும் பள்ளியில் படித்துள்ளார். 20 வயதுகளில் அக்கு பஞ்சர் மூலிகை வைத்தியமும் ஓரளவு படித்தபின்பு பௌத்த மத ஒரு பிரிவில் சேர்ந்து பின்பு சீன மருந்துக்கடையை ஆரம்பித்தார். இவர் விற்ற சீரற்ற மருந்துக்காக குற்றப்பணம்கட்டும்படியாயிற்று.

(9-ம் பக்கம் பார்க்க)

[3]

# தீவுகளின் இராஜகுமாரி எப்படி இந்து சமுத்திரத்தின் பிச்சைக்காரியானுள்

''ஒரு பிரதேசத்தை வெறறி கொள்ள வேண்டும் என்ருல் அங்கு நிரந்தர இராணுவ முகாம்களை அமைப்பதைவிடவும் குடியேற்றங்களை அமைப்பது மேலானது''

—மாக்கியவலி

''இடதுசாரிகளையும்''. தமிழரையும் டி. எஸ். சேனநாயக்கா தமது நிரந்தர எதிரிகளாகக் கருதினுர். இவ்விரு பகுதியினரையும் வீழ்த்துவது அவரது அரசியலின் முக்கிய மூலோபாயமாகும்.

''இடதுசாரிகள்'' தமக்குள் இருப்பவர்கள்; மடிக்குள் இருக்கும் நெருப்புப் போன்றவர்கள்; தம்மை வீழ்த்திப் பதவிக்கு வரக்கூடியவர்கள்; எனவே அவர்களையே முதலில் வீழ்த்தவேண்டும். அதற்காக தமிழரில் ஒரு பகுதியினருடன் கூட்டுச் சேரலாம். இதுதான் டி. எஸ். சேனநாயக்காவினதும் ஐ தே. க.வினதும் முதற்தர இலக்கு.

ஆனுல் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் தமிழருக்கும் ஆப்பு வைத்து இடதுசாரிகளையும் வீழ்த்தக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதனை சற்றும் பிசகாமற் செய்ய டி, எஸ். பின்னிற்கவில்லை. தனது ஈர் எதிரிகளுக்கும் எதிராக ஒரே நேரத்தற் செயற்படுத்தக் கூடிய விடயமாக சிங்களக்குடியேற்றத்தை டி. எஸ் தெரிவு செய்தார்.

1936ஆம் ஆண்டு தமிழ்த் தலைவர்களின் கண்ணுக்குள் மண்ணைத் தூவிவிட்டு சிங்களத் தலைவர்கள் தனிச் சிங்கள மந்திரி சபை அமைத்தனர்.

டொனமூர் அரசியலமைப்பின் கீழான நிர்வாக சபை ஆட்சி முறையின் கீழ் குறைந்தது இரண்டு அமைச்சர்களாகவாவது தமிழர் இருந்திருக்க முடியும். ஆனுல் ஏழு நிர்வாக சபைகளிலும் சிங்கள அரசாங்க சபை உறுப்பினர்கள் பெரும்பான்மையினராய் வரக்கூடியதாய் சிங்களத் தலைவர்கள் திட்டமிட்டு நிர்வாக சபைகளைப் பிரித்தனர். இறுயில் ஒவ்வொரு நிர்வாக சபையிலும் ஒவ்வொரு சிங்கள அமைச்சர் தெரிவான போதுதான் அமைச்சர் பதவிக்காக ஏங்கிக் கிடந்த தமிழ்த் தலைவர்கள் கண்விழித்தனர்,

கண்ணுக்குத் தெரியக்கூடிய உடனடி உண்மையிலேயே சிங்களத் தலைவர்கள் தமிழரை இப்படி ஏமாற்றினர் எனில், உடனடியாகக் கண்ணுக்குத் தெரியாத நீண்டகாலத் திட்டத்துக்குள் தமிழ்த் தலைவர்களை இலகுவாகவே ஏமாற்றிவிடலாம் என்று சிங்களத்தலைவர்கள் அன்று கணக்குப் போட்டுச் செயற்பட்டிருக்கடியும் இன்றும்கூட தமிழ்ப் பிரமுகர்கள் சிலர் டி. எஸ். சேனநாயக்காவை தாராண்மையான தலைவர் என்றும், அவர் உயிருடன் இருந்திருந்தால் இனப்பிரச்சினையே வந்திருக்காது என்றும் கூறுகின்றனர்...... என்ருல் அன்றைய நிலையில் டி. எஸ் எப்படி நோகாமல் ஊசி ஏற்றினுர் என்பது புலனுகும்.

இந்த வகையிற்ருன் வரண்டவலய விவசாய அபிவிருத்தி என்ற போர்வையில் இடதுசாரிகளுக்கு எதிராகவும், தமிழருக்கு எதிராகவும் சிங்களக் குடியேற்றத் திட்டத்தை டி. எஸ். செயற்படுத்திஞர்.

சேனநாயக்காவின் விவசாயக்கொள்கையையும், வரண்டவலயக் குடியேற்றத் திட்டத்தினையும் சமசமாஜிகள் வன்மையாக எதிர்த்தனர். விவசாயத்துடன் இணைந்த கைத்தொழில் மயமாக்கவே நாட்டை அபிவிருத்தி செய்யச் சிறந்த வழி என்ற கொள்கையையே வற்புறுத்தினர். காணி குடியேற்ற விவசாயக் கொள்கையின் விளைவாகவே கைத்தொழில் வளர்ச்சியில் நாடு பின்தங்க நேர்ந்தது என்று 1492ஆம் ஆண்டு எழுதிய கட்டுரை ஒன்றில் திரு. அனில் முனசிங்கா குறிப்பிட்டார்.

இந்த விவசாயக் கொள்கையின் அடிப்படையிலான குடியேற்றத் திட்டம் இன்னொரு அரசியல் உள்நோக்கத்தையும் உடையதாய் இருந்தது: வரண்ட வலயக் குடியேற்றத் திட்டத்தின் உள்நோக்கத்தின்படி தமிழ் மண்ணைச் சிங்களக் குடியேற்றத்திற்கு உட்படுத்துவதுமாகும். எனவே சேனநாயக்காவின் இருபெரும் எதிரிகளான இடதுசாரிகளையும், ஈழத்தமிழரையும் பலமிழக்கச் செய்ய விவசாயக் கொள்கை அடிப்படையில் உதவக்கூடியது என்ற முடிவு சேனநாயக்காவிடம் இருந்துள்ளதென்று தெளிவாகிறது.

மேற்படி கட்டுரையில் குடியேற்றத் திட்டம்பற்றி அனில் முனசிங்கா குறிப்பிடுகையில் ''நிலமற்ற ஏழைகளுக்கு நிலத்தையும் வீட்டையும உரிமையாக்குவதன் மூலம் சமசமாஜிஸ்டுகளுக்கு எதிராக குடியேற்றப்படுபவர்களின் ஆதரவை

சேனநாயக்கா தனக்குப் பெறலாம் என்று நம்பியதுடன் மன்னராட்சிக் காலத்தில் சிங்களவரிடம் தமிழர் பறித்தெடுத்த நிலத்தை இப்போது குடியேற்றத்தின்மூலம் கைப்பற்றுவதால சிங்கள இனரீதியான ஆதரவை ஐ. தே. க. பெறலாம் என்ற நோக்குடனும் இக்குடியேற்றக் கொள்கை செயற்படுத்தப்படுவதாக'' அவர் கூறினுர்.

மேலும் செலவும் வரவும் இலாபநட்ட அடிப்படையிற் கணக்குப் பார்த்து இக்குடியேற்றக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் 1960 ம் ஆண்டுவரை 450 மில்லியன்ரூபாவைச் செலவுசெய்து 30 மில்லியன் ரூபாவைப் பெற்றுக்கொண்டதைக் சுட்டிக் காட்டினுர். மொத்தத்தில் இதற்குப்பெரும் தொகையான பணம் குழிதோண்டிப் புதைக்கப்படுவதைக் குறைகூறினுர்.

இருவேறு புள்ளி விபரங்களை ஆதாரம்காட்டி அவர் தொடர்ந்து கூறுகையில் 3000 மில்லியன் ரூபா செலவில் 8 லட்சம் ஏக்கர் நிலம் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ளதையும், வருடம் 150 மில்லியன் செலவில் 10 வருடத்திற்கு 4,50,000 ஏக்கர் நிலம் விவசாயத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதையும் இத்தகைய செலவீடானது கைத்தொழில் வளர்ச்சியைக் குறுக்கத் தறித்துவிடும் எனறும் கூறினுர். இவ்வாருக ''ஒரு கல்லில இரு மாங்காய் படுங்குவது''போல இன வர்க்க நலன்களை சேனநாயக்கா அணுகினுர்.

குடியேற்றம் பற்றிய மாக்கியவலியின் ஆலோசனையின் விளக்கம் என்னவெனில் இராணுவமுகாம் மக்களிலிருந்து அந்நியப்பட்டிருக்கக் கூடியது. அது நிரந்தர தன்மையற்றது மட்டுமன்றி அதற்கு நாளாந்தம் பெரும் செலவும் செய்யவேண்டும். உணவும் ஏனையபண்டங்களும்தொடர்ச்சியாக விநியோகம் செய்ய வேண்டும். ஆனுல் குடியேற்றம் அவ்வாறில்லை. அது மக்களுக்குள் மக்களாக இருப்பதும், பிரதேசத்தைத் நிரந்தரமாகத் தனதாக்குவதும், விநி

## சிங்களக் குடியேற்றம் 'ஒரு கல்லில் இரு மாங்காய்''

யோகமின்றி தானே நிலைத்து வாழத்தக்கதும் ஆகும். எனவே பிரதேச ஆக்கிரமிபபிற்குஇராணுவ முகாம்களை விடவும் குடியேற்றங்கள் மேலானவை என்ற முடிவுக்கு மாக்கியவலி வந்தார்.

மாக்கியவலியின் முதற்தர மாணவஞகிய டி. எஸ் இதனைப் பின்பற்றினுர்.

விவசாயத்தையும், குடியேற்றத் திட்டத்தையும் ஐ. தே. க. எவ்வாறு தனது வர்க்க, இன கண்ணோட்டத்திலிருந்து அணுகியதோ அவ்வாறே மலையகத் தமிழரையும் அணுகியது மலையகத தோட்டத தொழிலாளர் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு பெரும் தொழிலாளர் சக்தியாய் இருந்தனர் அவர்களது வாக்குரிமையையும், பிரஜாவுரிமையையும் பறித்ததன்மூலம் இடதுசாரிகளுக்குச் சாதகமான அவாகளது அரசியற் சக்தியையும், இனவலிமையையும் கணிசமான அளவு டி. எஸ் பலவீனப்படுத்திஞர். இதிலும் ''ஒரு கல்லில் இரு மாங்காய்'' என்ற நிலைதான்.

அடுத்துத் தொடர இருப்பது:

''தமிழ் மண்ணிற் சில தொழிற்சாலைகள் அமைக்கப் பட்டதன் தந்திரம் என்ன?''

### மு. திருநாவுக்கரசு

# கழிவுப் பொருட்களிலிருந்து பல உபகரணங்களை உருவாக்கி வருகிறேம்

யாழ். மாநகர சபை இந்தக் கஷ்டமான காலத்தினில் இருக்கிற வளங்களைக்கொண்டு பொதுமக்களுக்கு செய்யக் கூடிய சேவைகள் சிலவற்றைச் செய்துவருகின்றது. இந்த வகையில் ஒரு தொழில் பட்டறை ஒன்றை உருவாக்கி சபைக்கும் எமது மக்களுக்கும் உதவக் கூடிய உபகரணங்கள் லவற்றை உருவாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றது.

மாநகர சபையின் தொழில் பட்டறையைக் காண்பிப்பதற்காக மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் என்னை அங்கு அழைத்துச் செல்கின்ருர்.

ஐம்பதுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்ருர்கள். மாநகர சபையில் ஏற்கனவே வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த, அந்தத்தொழிலாளர்களின் கைவண்ணத்தில் உருவான பல பொருட்களை ஆணையாளர் ஒவ்வொன்ருகக் காட்டி பறித்துக் கொள்கின்ருர்,

கூடுதலாக மண்ணெண்ணெய்த் தகரங்கள் பல பொருட்களுக்கு மூலப் பொருளாக பாவிக்கப்பட்டிருந்தன. வீதி விளக்குகள், அலுமாரிகள், மேசைகள், குப்பை அள்ளும் வண்டில்கள், உழவு யந்திரப் பெட்டிகள் போன்ற பல வகையர்ன பொருட்கள் உருவாக்கப்படுகின்றன.

இதுபற்றி மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் பின்வருமாறு கூறுகின்ருர்.

இந்தத் தொழில் பட்டறையில் இரண்டு விதமான நன்மைகளைப் பெறுகின்ருேம். ஒன்று எமது சபைக்கு தேவையான பொருட்களை நாமே செய்வதால், எமது சுய தேவையை ஓரளவுக்கு பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கின்றது. அடுத்தது சிக்கனம்.

இதில் முக்கியமான விடயம் என்ன வென்ருல் எம்மால் கழித்து ஒதுக்கப்பட்ட கழிவுப் பொருட்களில் இருந்து தான் கூடுதலாக இந்த உபகரணங்களைத்தயாரிக்கின்ருேம் எமது சபைக்குள் செயற்படும் சன சமூக நிலையங்களில் சிறுவருக்காக வைக்கப்பட்டிருக்கும் ஊஞ்சல்கள் எல்லாம் எமது தொழில் பட்டறையில் தான் இப்போது உருவாக்கப்படுகின்றன. உண்மையாக வேறு ஒரு இடத்தில் கொடுத்து செய்வதாக இருந்தால் இதன் பெறுமதி 10,000 ரூபாவாகும்.

தார் வந்தால் ருேட்டுப் போடவேண்டும். சீமெந்து வந்தால்தான் கட்டடம் கட்ட வேண்டும் என்ற நிலைகளிலிருந்து மாறி, இருக்கின்ற வளத்தைக்கொண்டு மக்களுக்கு சேவைகள் செய்யும் முயற்சியில் மாநகர சபை ஈடுபட்டு வருகின்றது.

எங்கள் தொழில் பட்டறையில் இருந்து நம்பர் பிளேற் தொடக்கம் பெரிய பெரிய வேலைகளைச் செய்கின்ருேம். எமது சபைக்கு பாவிக்கப்படும் உழவுயந்திரத்துக்கான பெட்டிகள் மண்ணெண்ணெய் தகரங்களை மூலப் பொருட்களாகக் கொண்டு உருவாக்கி வருகின்ருேம். வெளியே பல லட்சரூபா பெறுமதி கொண்ட இந்தப் பெட்டிகள், மிகவும் சிக்கனமான முறையில் லாபகரமாக தயாரிக்கப்படுகிறது.

இந்தத் தொழில் பட்டறைகளுக்குப் பொறுப்பாக இருக்கும் பொறியியலாளர் மா. இராமதாசை அணுகிக் கேட்டபோது, அவர் சொன்ஞர்:

இங்கு வேலைசெய்யும்தொழிலாளர்கள் சும்மா இருந்தால் என்ன, வேலைசெய்தால் என்ன அவர்களுக்கு சம்பளந்தான் அவர்கள் எல்லோரையும் இந்தத் தொழில் பட்டறைகளுக்கு ஏற்றவகையில் உருவா

### மாநகர ஆணையாளர்
### வி. பி. பாலசிங்கம் பேட்டி


க்கிவேலை செய்விக்கின்ருேம். மாநகரசபை எல்லைக்குள் குப்பைகள் அள்ளுவதற்கு 15 வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. இப்போது நான்கு வாகனங்கள் மாத்திரமே உள்ளன. இந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு எமதுதொழில்பட்டறைமூலம் 30க்கு மேற்பட்ட வண்டில் உருவாக்கியிருக்கிருேம். அந்த வண்டில்கள்தான் இப்போது கூடுதலான இந்தப் பணியைச் செய்துவருகின்றன.

(9ம் பக்கம் பார்க்க)

★ பட்டுக்குடை ★ ஆலவட்டம்
★ கொடி ★ வாகமாலை
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
ஞானம் ஆடையகம்
34, சோதியாதெரு, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
[ஏ-4986]

காலத்திற்கும் கருத்திறகும் உகந்த நவீன டிசைன்களில் 22 கரட் தங்கநகைகளும் வெள்ளி கொலுசு, மெட்டி வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.
தரமான 22 கரட் தங்க நகைகளை நவீன டிசைன்களில் குறித்த தவணையில் ஓடர் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்
சிறி கருமாரி நகையகம்
157/2, சந்தோசம் தெரு,
[கஸ்தூரியார் வீதி]
யாழ்ப்பாணம்.
[ஏ 4981]

## சிறு கதை



# அப்பா எங்கே?

எஸ். பி. கே.

பிள்ளைகளைப் படிப்பித்து, பெரிய பதவிகளில் இருக்கப்பார்த்து மகிழ்ந்து அவர்களின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி நாலு பேர் மதிக்கும்படியாக வாழவேண்டும்; அதுவே வெற்றிகரமான வாழ்க்கை என்ற கோட்பாட்டை செயல்படுத்தி வாழ்ந்தவர் சிதம்பரப்பிள்ளை. குடும்பத்தை செவ்வனே கொண்டுநடத்துவதில் பெரும் பங்கு வகித்த அன்னம்மா அவருக்கு துணைவியாக வாய்த்தது அவர் செய்த பாக்கியம்.

தனக்கு முன்பே மனைவியை இழந்துவிட்டபோதும் தொடர்ந்து நான்காண்டுகள் அவள் பிரிவே சிந்தனையாக வாழ்க்கையில் பிடிப்பின்றி காலங்கடத்தியவர் சிதம்பரப்பிள்ளை.

பிள்ளைகள் வளர்ந்து படித்து அரச பதவிகளில் எக்கவுண்டனுகவும், எஞ்சினியராகவும், நிர்வாக சேவையிலும், வெளிநாட்டிலும் உழைத்து இலட்சக்கணக்கில் பணம் அனுப்பிவர அவர்களுக்கு சமமான பொருளாதார அடிப்படைகளை உறுதிப்படுத்தி மனநிறைவுடன் வாழ்ந்தவருக்கு மனைவியின் திடீர் மறைவு ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது.

இதுதான் வாழ்க்கை என்று இறுமாப்புடனும் செல்வாக்குடனும் எழுபது வயது வரை வாழ்ந்தவருக்கு அதுவரை பக்கபலமாக இருந்துவந்த இல்லத்தரசியின் மறைவுடன், இதுவா வாழ்க்கை என்ற துயர் படர்ந்த கேள்வி எழுந்தபோது எதிர்காலம் இருள்மயமாகத் தெரிந்தது.

இப்படிப் பல திடீர் முடிவுகளையும் திருப்பங்களையும் பல குடும்பங்களில் அவர் பார்த்தவர்தான். ஆயினும் தன் வாழ்விலும் அவை குறுக்கிடும் என எதிர்பார்த்தாரா?

துன்பம் வரும்போதுதான் வாழ்க்கையின் மறுபக்கத்தையும் மனிதன் சந்திக்கிறுன்.

வயதுக்கேற்றுற்போல் நோயும் பற்றிக்கொண்டபோது அவருக்கு வெறுப்பு மேலிட்டது.

அன்புக்கும் நிழலுக்கும் பிள்ளைகள் அருகில் இல்லை.

கஷ்டங்களையும் தியாகங்களையும் அனுபவித்து தம்மை உயர்த்தி வைத்த அப்பாவை நன்றியுடன், வயோதிப காலத்தில் பராமரிக்க வேண்டுமே என எண்ணுத பிள்ளைகள் எங்கோ தொலைவில் வாழ்கின்றனர்.

பணம் மட்டும் மனிதனுக்கு நிறைவைத் தந்துவிடாது. தனிமையும் வெறுமையும் மனதை வாட்டுகின்றன. வீட்டில் ஒரு மகனும் மருமகளும் இருக்கிறுர்கள். அவர்களின் இயந்திர வாழ்க்கை, காலத்தின் பணிப்பு, அன்பு, பந்த பாசம் என்ற ஆன்ம உணர்வுகள் என்பதெல்லாம் பெரியதொரு குடும்பத்தைக் கட்டிக் காத்து வந்த அன்னம்மாவுடன் போய்விட்டன. தாயை இழந்த குஞ்சுகளாக தமக்கெனக் கட்டப்பட்ட கூடுகளில் அந்நியமாய் விட்ட நிலை, இளமைக் காலத்து பசுமையான நினைவுகளுடன் அன்னம்மாவின் முகமும் அடிக்கடி அவரை வாட்டி வந்தன. சீ இருந்தென்ன... என்ற போக்கில் அவர் நடமாடியதை அயலவர்களும் அவதானித்தேயிருந்தனர்.

அதைவைத்தே—

அவர் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டதாக வந்த செய்தியை நம்பினர்.

ஃ ஃ ஃ

சிதம்பரப்பிள்ளையின் உடல் போர்த்தப்பட்டு கட்டிலில் கிடந்தது. உடன் இருந்த மகனும் அவர் நண்பர்களும் இறுதிக்கிரியைகளைத் திட்டமிட்டனர். பிள்ளைகளுக்கு தகவல் கொடுக்கும் வழிபற்றிப் பேசிக்கொண்டனர். அப்பேச்சில் ஆர்வமோ அவசரமோ இருக்கவில்லை. அந்நிய நாட்டில் இருக்கும் மக்கள், மருமக்களுக்கு அறிவித்தாலும் உடன் வருவது சாத்தியமில்லை என்பது ஒருதலைத் தீர்மானமாயிற்று. கொழும்பில் இருக்கும் ஒரு மகளுக்கு அறிவித்தும் அவள் இன்று புறப்பட்டு உடனே வரமுடியாது என்று அறிவித்திருந்தாள்.

சிதம்பரப்பிள்ளையின் முடிவுக்குக் காரணம் கொலையா? தற்கொலையா? விபத்தா? என அறிய விசாரணையை மேற்கொண்டவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியங்களையும் அவரது வயதையும் 'கருணை' யுடன் கருத்தில் கொண்டு தற்கொலை எனத் தீர்மானித்தனர்.

பிள்ளைகள் சுற்றத்தார் யாரும் தொலைவிலிருந்து வருவதற்கில்லை என்பதாலும் பூதவுடல் துப்பரவு செய்து நாலைந்து நாள் வைத்திருக்கும் அவசியம் எழவில்லை. அன்று மாலையே தகனம் செய்ய ஆயத்தங்கள் துரிதமாக நடைபெற்றன.

மாலை ஐந்து மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெறும் என்று சொல்லிக்கொண்டு ஒலிபெருக்கி வாகனம் ஊர்வலம் வந்தது.

உள்ளூரில் இருக்கும் சொந்தக்காரர்களுக்கு அறிவிக்கும் அடுத்த கட்டம் தொடங்க பத்து மணியாயிற்று.

சைக்கிளை எடுத்துக் கொண்டு சேதி சொல்லப் போன இளைஞர்கள் குறிப்பிட்ட நேரத்தை மறந்து மூன்று மணிக்கு 'எடுப்பதாக' சிலருக்கு சொல்லிவிட்டுத் திரும்பி வந்தபோது நேரம் நான்கு மணியாயிற்று.

தூர ஊர் சொந்தம் வந்து சேரவில்லை.

அப்பா...என்று அழுவதற்கு வீட்டில் ஒரு பெண்பிள்ளை இல்லை.

பெறுமகள் ஒருத்தி அடிக்கடி விம்மிக்கொண்டிருந்தாள். அவள் அடுத்த வீட்டில் இருப்பவள். பெரியப்பாவிடம் பாசம் வைத்திருந்தவள். வயதான காலத்தில் அவர் விரும்பும் தின்பண்டங்களை தயாரித்துக் கொடுப்பவள், பெரியப்பா அப்பத்துக்கு ஆசைப்படுகிறுர் என்றுணர்ந்த மகள் அன்றிரவு அப்பத்துக்கு மா கரைத்து வைத்திருந்தாள்.

அன்றிரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுக்கை விரித்த பெரியப்பா இப்படி ஏன் செய்தார். என்ற கேள்வியுடன் அவள் வம்மிக்கொண்டிருக்கிறுள். என்ன நடந்தது? விழுந்தாரா? இருட்டில் தண்ணீர் அள்ளப்போய் தடக்கி விழுந்தாரா? அல்லது மகனிடம்—மருமகளிடம்—அவர் விரும்பிய அரவணைப்பு கிடைக்காமல்.........

கனடாவில் இருக்கும் ஒரு மகள் தன் மாமனுரைக் கூப்பிட்டு வைத்திருக்கிறுள். அண்ணு இருக்கிறுர், அப்பாவைக் கவனிப்பார் என விட்டுவிட்டாள் என்று வெறுப்புற்றுரா......?

இவருக்கு என்ன குறை. .? என்று வெளியுலகம் பேசிக்கொண்டது.

சாவீட்டுக்கு வந்திருந்தவர்கள் குழுக்களாக கூடி ஆய்வுகளில் ஈடுபட்டனர்.

''ஏன் இவர் விழுந்தார் .. என்ன குறை இருக்கு?''

பலர் மனதிலும் இப்படி கேள்விகளும் ;சந்தேகங்களும் எழுந்தன.

''இத்தனை செல்வாக்குப் பெற்ற மனிதனின் முடிவு இப்படியா இருக்கவேண்டும்?''

''ஏன் கொழும்பில் இருக்கும் மகள் வரமுடியாது......? நாளை இல்லையென்றுல் மறு நாள் வரட்டுமே ஏன் நான்கு நாளைக்கு வைத்திருந்து எடுத்தால் என்ன ?வெளிநாட்டிலிருந்து பிள்ளைகள் வரும் வரை ஒரு கிழமைகூட வைத்திருக்கிறுர்களே...நாலுபெண் பிள்ளைகளைப் பெற்ற மனுசன்...அப்பா என்று அழ ஒரு பெண்பிள்ளை அருகில் இல்லை ..''

''ஏன் அண்ணு இரண்டு நாள் பொறுக்க உங்களால் முடியவில்லை...காரணம் என்ன...?என்று கேட்டு அவள் கடிதம் எழுதினுல் இவர் என்ன பதில் சொல்வார்......?

''சரி...இது தற்கொலையா.. அல்லது சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுக்கை விரித்த மனுசன்...?''

''ஏன் தண்ணீர்கூட வெளியிலை வாளியில் அவருடைய தேவைக்கென்று வைத்திருப்பாராமே...இரவில் ஏன்கிணற்றடிக்குப் போனுர் .....?''

''ஏன் இந்த அவசரம்... கோப்பாய் பெறுமகள் கூட வராமல்.........

''அட பத்து மணிக்குப் போன பொடியன் மூன்று மணிக்கு எடுப்பதாகச் சொல்லிவிட்டு வந்தால் உடன் வர பஸ் கிடைக்க வேணுமே...''

பாடகர்களின் திடீர் குரல் கேட்டு ஆய்வுப்பட்டறை தடைபடுகிறது.

''கைத்தல நிறைகனி
அப்பமோ டவல்பொரி
கப்பிய கரிமுகன்
அடிபேணி.........''

கிரியைகள் ஆரம்பித்துவிட்டது.

எட்ட இருந்தவர்கள் இப்போ கையில் உலக்கையுடன்நிற்கும் மகனையும் பேழையையும் சுற்றி நிற்கிறுர்கள்.

''முத்துநற்றுமம்
பூமாலை தூக்கி
முளைக்குடந் தூபநற்
றீபம் வைம்மின்
சத்தியும் சோமியும்
பார்மகளு
நாமகளோடு
பல்லாண்டிசைமின் ....''

அத்தான்...... உங்களுக்கு இந்த விதியா...... என் நாவிலிருந்து எழுந்த கேள்வி என் காதுக்கும் கேளாத கேள்வி... நெஞ்சிற்குள் நிற்க......

கட்டுமட்டான, கம்பீரமான அத்தானின் இளமைத் தோற்றம் என் கண்ணுக்குள் வருகிறது ..... காலக்கடலில் நினைவலைகள் பின்னேக்கிப் பாய்கின்றன.

எனக்குப் பத்து வயதாக இருந்தபோது அவர் அக்காவை மணம் முடித்துக் கொண்டார். அதன்பின் நான் அவருக்கும் செல்லப்பிள்ளை. அப்பாவை இளவயதிலேயே இழந்த என்னை ராசு ராசு என்று செல்லமாக அழைத்து அன்பு பாராட்டிவந்தார் என் அக்காவின்மனநிலை உணர்ந்து எனக்கு ஆதரவளித்து வந்த அத்தான்......

அத்தான்... உங்கள் பிள்ளைகளைவிட உங்களை அதிகம் அறிந்தவன் நான் உங்களுடன் அதிக காலம் பழகியவன் நான்......

அக்கா போனபின் உங்களிடம் ஒரு வெறுட்பு, ஒரு வெறுமை படர்ந்திருந்ததை நான் அவதானித்தேன், உங்கள் வீட்டுக்கு அருகில் நான் வந்து இருக்கும் வாய்ப்பு வருகிறது வந்துவிட்டால் உங்களை நான் நன்றியுடன் பராமரிப்பேன் என நினைத்திருந்தேன். அதற்கிடையில் அவசரப்பட்டு .....

''முத்தைத்தரு பத்தித்
திருநகை
அத்திக்கிறை சத்திச்சரவண
முத்திக்கொரு வித்துக்குரு
பரனெனபோதும் ''

திடுக்கிட வைத்த முருகன் துதி என் சிந்தனையோட்டத்தை தடைசெய்ய —

அதனை அவர்கள் பாடும் தொனியில் கருத்தூன்றி நிற்கிறேன்.

கிரியைகள் முடிந்தன.

பேழை மூடப்படுகிறது— உச்சக்கட்டம்.

அப்பா...என அந்தப் பேழை மேல் விழுந்து அழுவதற்கோ ஒரு பெண்பிள்ளை இல்லை.

அழுதது அவர் அண்ணன் மகளும் அயலவர்களும் மருமகளும்கூட.

ஃ ஃ ஃ

பேழையை உள்வாங்கிய வாகனம் மெல்ல நகருகிறது.

அழுகுரல் ஓய்ந்துவிட்டது. பாடல் தொடருகிறது,

''எத்தாய ரெத்தந்தை
யெச்சுற்றத்தார்
ரெம்மாடு சும்மாடா
மேவர் நல்லார்
செத்தால் வந்துதவுவா
ரொருவரில்லை
சிறுவிறகாற் றீமூட்டிச்
செல்லா நிற்பர் .''

வீட்டு வாசலில் இடதுபக்கம் சிதம்பரப்பிள்ளை நாளும் பூபோட்டு விளக்கேற்றிய வயிரவர் கோயில் பூட்டிக்கிடக்கிறது. ஷெல் சிதறல் தாக்கிய அதன் பின்புறம் சிதைந்து கிடக்கிறது.

கோயிலைச் சூழ செழித்து வளர்ந்திருந்த பொன்நொச்சி மரங்கள் சற்றும்எதிர்பாராது அடித்த காற்றினுல் ஒருமுறை தாழ்ந்து பூக்களை பேழை தாங்கிய வாகனம்மீது சொரிந்து எழுந்தன

தெருவில் ஏறிய வாகனம் நூறு யார் தூரம் மெல்ல நகர்ந்து பின்னர் விரைந்து மறைந்து செம்மணிச் சுடலையை அடைந்தது.

சைக்கிகளில்பின் தொடர்ந்தவர்கள் சுடலையை அடைந்தபோது சிதம்பரப்பிள்ளையாரின் பூதவுடல் சிதையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியை நடைபெற்றுக்கொண்டிருந்தன.

கொள்ளிக் குடத்துடன் மகன் சிதையைச் சுற்றி வந்தான்.

''பெயரை நீக்கி பிணம்
என்று பேரிட்டு
ஊரைக் கூட்டி உரக்க
அழுதிட்டு
சூரையங் காட்டிலே
கொண்டுபோய் சுட்ட
பின்
நீரில்மூழ்கி நினைவொழிந்
தார்களே,'

பாடகர்கள் தமது பணியை முடித்துக்கொண்டுபோய் தங் குமடத்தில் அமர்ந்து வெற்றிலை போடுகிறுர்கள்.

(யாவும் கறபனை)

## ஆக்கங்கள் தேவை

ஈழநாடு வாரமலருக்கு தரமான சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், சிறுவர் மஞ்சரிக்கான ஆக்கங்கள் வரவேற்கப் படுகின்றன.

முகூர்த்த பட்டுப் புடவைகளுக்கும்
ரவிக்கைத் துணிகளுக்கும்
பெயர்பெற்ற ஸ்தாபனம்

லிங்கம் பட்டு அகம்
18, 21, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

[ஏ4962]

# நாடகமும் வாழ்க்கையும்

நாடக வகைகள் நூற்றுக்கணக்கின. அவற்றில் வாழ்க்கைக்கு மிக அண்மையில் வருவதும்—அதைத்திறம்பட சித்திரிப்பதுமான யதார்த்த நாடகத்திற்கே (Realisic Play) இக்கட்டுரை பொருத்தமானது.

## உலகமே ஒரு நாடக மேடை

''உலகமேஒரு நாடகமேடை அதில் ஆண்-பெண் அனைவரும் வெறும் ந—க நடிகையர்'' என்றூர் மகாகவியும் நாடக மேதையுமான ஷேக்ஸ்பியர். இந்தக்கூற்றை நாம் எல்லோரும் அடிக்கடி உச்சரித்துக் கொள்கிறோம். இது மட்டும் உண்மையாக இருந்தால், எங்கள் ஒவ்வொருவரது வாழ்க்கையும் சுறுசுறுப்பும், விறுவிறுப்பும். உணர்ச்சிச் செறிவும், இன்பமும், துன்பமும், சுவையும் கொண்ட ஒரு கதையாக அல்லவா அமைந்திருக்கும்? அதில் அலுப்படிக்கும் நேரங்களே வரா. எங்கள் வாழ்க்கைகள் அப்படியா அமைந்துள்ளன? அதில் எத்தனை வீண் அலைச்சல்கள். எத்தனை அர்த்தமற்ற பேச்சுக்கள் எத்தனை நோக்கமற்ற செயல்கள், எத்தனை அலுப்படிப்புகள்! எத்தனை அறுவைகள்!

நாங்கள் எல்லோரும் நாடக நடிக நடிகைகள் என்று நினைத்துப் பார்க்கச் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. இல்லையா? ஆனல் எல்லாரும் அப்படி ஆக முடியாது. அதற்கேற்ற உடலமைப்பும் முகவெட்டும் நடிப்புத்திறனும் இருந்தாலும் கூட எல்லோரும் நடிகர்களானல் பார்வையாளர்கள் யார்? அப்படி யாராவது பார்வையாளர்கள் வந்து சந்தித்தாலும் எங்கள் வாழ்க்கை என்ற அறுவை நாடகத்தைப் பார்த்து பார்த்துக் களைத்துப் போய், அவர்கள் இனி நாடகமே வேண்டாம் என்ற முடிவுக்கே வந்துவிடுவார்கள்.

## தெரிவு செய்தல்

விஞ்ஞானம் உள்ளதை உள்ளபடியே வைத்து ஆராய்ந்து, உண்மைகளைக் கண்டறிகின்றது. கலை உள்ளதைச் சிறிது மாற்றியும் திருத்தியுமே உண்மைகளைக் கண்டறிய முயற்சிக்கின்றது. அப்படிச் சற்று மாற்றி, திருத்தி அழகுபடுத்தி, அமைக்காவிட்டால் அங்குகலையே இல்லை எனலாம்! இது கலைக்குமட்டுமல்ல, இலக்கியத்திற்கும் பொருந்தும். எல்லாவிதக் கலைகளுக்கும் பரம்பரை பரம்பரையாகப் போற்றப்பட்டு வந்த சில மரபுகள் உண்டு. மரபுகள் இடத்திற்கிடம், காலத்திற்குக் காலம் வேறுபடலாம். ஆனல் அந்த மரபுகளை அனுசரித்துப் போகின்ற பொழுதுதான், அங்கு அழகு பிறக்கின்றது. சங்கீதத்திற்கு ராகங்களும் நடனத்திற்கு தாளமும், லயமும், முத்திரைகளும் இல்லாவிட்டால் அங்கு அழகு பிறக்குமா?

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

எல்லாவகை இலக்கியங்களுமே வாழ்க்கையைப் பிரதிபலிப்பவை. அதைக் குறியீடாகக் காட்டுபவை. அவற்றில் நாடகம் மட்டுமே உயிருள்ள மனிதர்களால் மேடையில் நடித்துக் காட்டப்படுவது. மக்களுடன் நேரடித் தொடர்புகொள்வது. எனவே நாடகம் சம்பந்தமான மரபுகள் ஏனைய மரபுகளைவிட வலிமையானவை. உயிருள்ள மனிதர்கள் மேடையில் உண்மையான வாழ்க்கையை வாழ்கின்றனர் என்பது போன்ற ஒரு பிரமையை நாடகாசிரியன் ஏற்படுத்தவேண்டும். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் ஒரு முழுமையான வாழ்க்கையை அவன் காட்டவேண்டும். மேடையில் காட்டப்படும் வாழ்க்கை, நிஜவாழ்க்கையை விட அர்த்தமுள்ளதாகவும், செறிவானதாகவும் அழகானதாகவும் இருப்பது அவசியமாகின்றது — பிளாஸ்டிக் பூக்கள் சில உண்மையான பூக்களைவிட உறுப்பாகவும் வர்ணமாகவும் அழகாகவும் இருக்கின்றனவே. அதுபோல! எனவே நாடகாசிரியன்வாழ்க்கையில் மிகச் செறிவானதும் உணர்ச்சிகரமானதுமான பகுதியைத்தெரிவுசெய்துஎடுத்து, அதற்கு மெருகூட்டி, நாடகமாக்கிக் காட்டுகிறுன்.

## ஒரு மாயத் தோற்றம்

நாங்கள் மேடையில் காண்பது உண்மை போன்ற ஒரு மாயத்தோற்றமே(an illusion of life) தவிர உண்மைஅன்று அது ஒரு பிரமை. அது உண்மை என்று எங்களை நம்ப வைக்க நாடகாசிரியன் முயல்கிறுன். அதில் அவன் எவ்வளவு தூரம் வெற்றி பெறுகிறுன் என்பது அவனது திறமையைப் பொறுத்தது. நாடகம் பார்க்க வருபவர்களும் அதை உண்மை என்று நம்பிச் சில மணி நேரம் அதைப் பார்த்து மகிழ வந்திருப்பதால் நாடகாசிரியனது வேலை இலகுவாகின்றது.

வேறுபல வழிகளிலும் நாடகாசிரியன் இந்த நம்பகத் தன்மையை ஏற்படுத்தலாம். நடக்கக் கூடிய ஒருகதையைத் தெரிவுசெய்ய வேண்டும். சமூகத்தில் நாம் சந்தித்துப் பழகுகின்ற சராசரி மனிதர்கள் போன்ற பாத்திரங்களை உருவாக்கவேண்டும். நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் சமூகத்தின் பிரச்னைகளே நாடகத்தில் எடுத்தாளப்படவேண்டும் அப்பொழுதுதான் நாடகத்தில் ஓர் அர்த்தமும் இருக்கும் பார்வையாளர்களும் அதன் பால் ஈர்க்கப்படுவர். அந்தப் பிரச்சினைகளைத் தங்கள் பிரச்சினைகளாகவே காண்பர். நாடக பாத்திரங்களுடன் ஒன்றிப்போய் நின்று நாடகத்தை ரசிப்பர். நாடக பாத்திரங்களுக்காக அனுதாபப்படுவர். கண்ணீர் சிந்துவர். அவர்கள் வெற்றி பெறுகின்றபொழுது இவர்களும் சிரித்து மகிழ்வர்.

நாடகங்களுக்கான கதைகளை எங்கிருந்து பெறுவது என்ற வினஎழுகின்றது. வாழ்க்கையிலிருந்து தான் அவற்றைப்பெறவேண்டும்! வேறு எங்கே தான் போவது கதைகளுக்கு? வாசிப்பின் மூலமும் பெறலாம் என்று நீங்கள் சொல்வது கேட்கின்றது, ஆனல் அந்த நூல்களை எழுதியவர்களும் வாழ்க்கையிலிருந்துதான் அந்தக் கதைகளைப் பெற்றனர் என்பதை நாம் மறந்துவிடலாகாது. நான் எழுதிய இருநூற்றைம்பது நாடகங்களுக்கும் கதைகளை வாழ்க்கையிலிருந்துதான் பெற்றேன்.

வாழ்க்கையைக்கூர்ந்து அவதானித்தால் அதில் எத்தனையோ நாடகக் கோலங்கள் உணர்ச்சிக் கட்டங்கள் - சுவையான சம்பவங்கள்- படிப்பினைகள் வருவதைக் காணலாம். அவற்றை எடுத்து உங்களது அறிவு-அனுபவம்-கலையுணர்வு கற்பனை ஆகியவற்றுடன் கலந்து அழகான நாடகங்களாகப் பின்னுங்கள்! ஒரு நல்ல கதை கிடைத்துவிட்டால் பாத்திரங்கள் தாமாகவே வந்தமையும்.

# டைனேஸரின் புதிய தகவல்களும் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளும்

சீனுவில் 'டைனேசர்' என்ற புராதன முட்டைகளின் சில பகுதிகள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

65 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்து அழிந்துவிட்டதாகக் கருதப்படும் அந்த விலங்குகள் இன்றும் உயிருடன் இருக்கின்றன என்று விஞ்ஞானிகள் சிலர் தெரிவித்து வருகின்றனர்.

சீனுவில் மீட்கப்பட்டுள்ள இந்த 'டைனேசர்' முட்டையின் பெரும்பகுதிகள் நல்ல நிலையில் இருப்பதாகவும், 'டைனேசர்' பற்றி இன்று விஞ்ஞானிகள் ஆராயப்படும் முயற்சிக்கு இந்த முட்டைகள் பெரும் ஆதாரமாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

வட அமெரிக்காவின் காட்டுப் பிரதேசம, கனடாவின் மேற்குக் கரையோரம், பிரிட்டிஷ் கொலம்பியா, சென் லூயிஸ் மி ஸோறி வாவி போன்ற நீர்நிலைகளில் நீண்ட கழுத்தை உடைய 50 அடி உயரமான 'டைனேசர்' விலங்கினத்தை பல அமெரிக்கர்களும், கனடா வாசிகளும் அடிக்கடி கண்டுள்ளனர். அதனையொட்டி தீவிர ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

ஆனல் டைனேசரின் உயிர் அணுக்கள் வாவிகளின் ஆழத்தில் வாழ்ந்துவருகின்றன. பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள 'ஒகான் கென்' வாவியில் 1000 அடி ஆழத்தில் இந்த உயிரினம் வாழ்ந்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடுமையான பச்சை நிற கழுத்து நீண்ட டைனேசர் கனடாவின் காட்டுப் பிரதேசத்தில் வாழ்ந்து வருவதால் 1782ம் ஆண்டு தகவல் அறிக்கை பதிவேடுகளில் இந்தச் சம்பவம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பெரிய பாம்பு, பல்லியினம் கலந்த உருவமைப்பைக் கொண்டே இந்த உயிரினம் விளங்குகின்றது. இதேவேளை ஸ்கொட்டிச் லோச் வாவியில் பிரித்தானிய வீரர்களினுல் பிடிழகப்பட்ட 'நெஸி' என்னும் விலங்கினம் ஆழ் வாவியில் வாழ்ந்து வருகின்றது. இதனை அமைரிக்க ஆய்வாளர்கள் ஆராய்ந்து வருகிறூர்கள்.

ஆனல் விஞ்ஞானிகள் டைனேசர் பற்றி மேலும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மருத்துவ அறிவுரைகள்

## மன அமைதி

மனதை அமைதியாக வைத்திருக்க கற்றுக்கொள்ள வேண்டும். சலனத்துக்கு இடம் கொடுத்தால் சங்கடங்கள் நேர்வதை தவிர்க்க முடியாது.

## உடல் நலம்

சுறுசுறுப்பாக இருப்பது தான் ஆரோக்கிய வாழ்வின் அறிகுறி. உடல் நலக் குறைவே சோம்பலுக்குக் காரணம்.

## உடலின் மதிப்பு

ஏழு சோப் கட்டிகள் தயாரிக்கப் போதுமான கொழுப்பும், ஒன்பதாயிரம் பென்சில்கள் செய்யப் போதுமான கரியும் ஒரு ஆணி தயாரிக்கப் போதுசான இரும்பும் இரண்டாயிரம் தீக்குச்சிகள் செய்யப் போதுமான பொஸ்பரசும் உடலில் உள்ளன.

## உடல் பருமன்

உடலைப் பருக்க விடுவது அழகுக்கு மட்டுமல்ல ஆரோக்கியத்துக்கும் கேடு பயப்பது. தவறுன உணவும் உடலுழைப்பு இன்மையும் தான் இதற்குக் காரணம்.

## கட்டுப்பாடு

உடல் இயக்கவேகம் நாற்பது வயதுக்கு மேல் மந்தப்படுவதால் உணவின் அளவைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

''இலக்கியா''

# முப்பது மில்லியன் வருடங்களாக கனிமப்பசையில் முடங்கிய பக்டீரியா நவீன உலகில் பிரவேசம்?

[இந்த ஜுராஸிக் காலத்து 'மம்மி' நிலை நுண்ணுயிரை மஞ்சள் அம்பரை விட்டு வெளிக்கொணர்ந்து, 'உயிர்' கொடுத்து இயங்க வைத்தேன் என்று கலிபோர்னிய பொலிடெக்னிக் பேராசிரியர் டாக்டர் கேனே கூறுவது நிரூபிக்கப்படின் இதுவரை யாராலும் முடியாது எனக் கருதப்பட்டதைச் சாதித்துவிட்ட பெருஞ் சாதனையாளராக அவர் புகழப்படுவார்.]

முப்பது மில்லியன் ஆண்டுகளாக தூக்க நிலையில் செயற்பாடின்றி முடங்கிக் கிடந்தபக்டீரியாவைஉயிர்ப்பு நிலையில் மீள இயங்கவைத்திருப்பதாக பிரபலமான நுண்ணுயிரியல் விஞ்ஞானி ஒருவர் பகிரங்கமாகப் பிரகடனம் செய்திருக்கிறூர்.

கியூபாவில் பிறந்து அமெரிக்காவில் வசிக்கும் கலிபோர்னியாவின் பொலிடெக்னிக் பல்கலைக்கழகப் பேராசிரியரான டாக்டர் ரோல் கேனே என்பவரே உயிரியலாளர்களை ஆச்சரியத்தில் மூழ்கடிக்கும் தனது கண்டுபிடிப்பை அறிவித்துள்ளார்.

ஸயன்ஸ் என்ற சஞ்சிகை இப்பேராசிரியரின் முடிவை வெளியிட்டிருக்கின்றது. இவரது இந்த ஆராய்ச்சி குறித்து முன்பே தெரிந்துவைத்திருந்த சில விஞ்ஞான விமர்சகர்கள் இது நடவாத காரியம் என மறுத்துள்ளனர். உயிர்ப்பு நிலை இயக்கத்தை டாக்டர் கேனே உண்டாக்கிவிட்டிருந்தால் அச்செயல் வெறும் தற்செயலான விபத்தாகவே அமைந்திருக்கமுடியும் என இவர்கள் சொல்கின்றனர்.

டாக்டர் ஜே. கேனேவின் ஆய்வுகூடத்தில் உள்ள வேறு [இயக்க நிலை] நுண்ணங்கிகள் தற்போது அவர் ஆய்வு செய்கின்ற மாதிரிகளுடன் தற்செயலாகக் கலந்திருக்கலாம். இவற்றின் காரணமாகவே அவர் ஆய்வுசெய்யும் இயக்கமற்ற தூக்கநிலை பாக்டீரியா இயங்கும் நிலையை அடைந்தது என அவர் முடிவெடுத்திருக்கலாம் என அந்த விஞ்ஞான விமரிசகர்கள் தமது மறுப்புக்கு காரணம் காட்டியுள்ளனர்.

★ தீபன் ★

இவர்களது மறுப்பை ஒதுக்கிவிட்டு டாக்டர் கேனே தனது முடிவில் உறுதியாக இருக்கிறூர்.

(8-ம் பக்கம் பார்க்க)

இன்றைய அறிமுகம் நாளைய நாகரீகம்
முகூர்த்தப் பட்டுப் பிடவைகளுக்கு
பெயர் பெற்ற ஸ்தாபனம்
ராசி பட்டுச் சோலை
70, 71 A சிறப்பு அங்காடி
[நவீனசந்தை உட்புறம்]
யாழ்ப்பாணம்.
[ஏ 4926[

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

மாதர் அரங்கு

# ஏன் முடியாது பெண்களால்

மனித வாழ்வின் யதார்த்தங்களை உணர்ச்சியோடு அப்படியே எழுத்தில் வடித்த ஒரு பெண்ணின் கட்டுரைகள் ஏறக்குறைய ஒரு நூற்றுண்டு காலத்துக்கு முன் அமெரிக்காவில் 'பிட்ஸ்பேக்' (Pitsburg) நகரத்தைப் பரபரப்பில் ஆழ்த்திக்கொண்டிருந்தது.

தனது எழுத்துக் கிடைத்திருந்த வரவேற்பு ஏற்படுத்திய நம்பிக்கையில் அந்தப் பெண் - எலிஸபெத் - நியூயோர்க்கின் ஒவ்வொரு பத்திரிகை அலுவலமாக ஏறி இறங்கிஞள். பத்திரிகையாளராய் வருவதற்குரிய ஆவலோடு!

ஆனாலும் அவளுக்கு மிஞ்சியது ஏமாற்றமே.

''பெண்ணுக்கு வேலையா? அதுவும் பத்திரிகையில்.''

''பெண் ஒருத்தி எப்படிப் பத்திரிகையாளராய்...? நடக்குமா?''

நடக்கும் என்பதை நிரூபிக்க எலிஸபெத் என்ற நெல்லி பிளேய் தன்னை ஒரு அக்கினிப் பரீட்சைக்கு உட்படுத்த வேண்டியிருந்தபோதும் அவள் தயங்கவில்லை.

'பிளாக்வெல்' என்ற தீவிலுள்ள மன நோயாளர் விடுதியின் அவலங்களை நேரில் போய்க் கண்டு அவற்றை எழுதவேண்டும்.

செய்துமுடித்தால் 'வேல்ட்' (World) என்ற பத்திரிகையில் வேலை கிடைக்கும் இவ்வாறு அதன பதிப்பாளர் ஜோசப் பிளிட்சர் சொல்லிவிட்டார்.

பரீட்சையில் தேறிஞள் நெல்லி:

அடுத்து உலகைச்சுற்றிவந்து அந்த அனுபவங்களைக் கட்டுரையாக எழுதும் முயற்சி.

72 நாட்களில் உலகப் பயணம் முடித்துத் திரும்பி வந்தவளை ஜோசப் பிளிட்சர் வரவேற்றுக் கூறிய வார்த்தைகள்:

''நெல்லிக் கண்ணே! வென்றுவிட்டாய், நீ வெல்வாய் என்று எனக்குத் தெரியும்.''

உலகின் முதல் பெண் நிருபர் என்ற பெருமையை நெல்லி தனதாக்கிக்கொண்டாள். அதுவும் ஒரு நூற்றுண்டுக்கு முன்.

பெண்களைப்பொறுத்தவரை பல்வேறுதுறைகளில் சாதனைப் பட்டியல் இன்று வளர்ந்து கொண்டிருக்கிறது. எனினும் பெண்களைத் திறமைமிக்கவர்களாக, எதையும் செய்யக் கூடியவர்களாக ஏற்றுக்கொள்ளும் சமூக மனவுலக மாற்றம் இன்னமும் நிகழவில்லை என்றே தோன்றுகிறது.

ஏனெனில், அன்று நெல்லி பிளேய்க்கு ஏற்பட்ட ஏமாற்றம் இன்றும் இங்கு பல பெண்களுக்கு ஏற்பட்டுக்கொண்டிருப்பது கண்கூடான உண்மை.

நெல்லியைப் போல ஏன் முடியாது எம்நாட்டுப் பெண்களால்?

– சித்தாரா

# இவ்வாரம் எப்படி?

11-06-95 முதல் 17-06-95 வரை

### மேடம்

காரியங்களை சாதிப்பது கஷ்டமாக இருக்கும், எதிர்ப்புக்கள் உருவாகும், குடும்பத்தில் அன்னியோன்யம் குன்றும், பணநிலை மந்தமாக இருக்கும், எதிர்பாராத செலவினமுண்டு, உடல் நலம் பாதிப்படையலாம், சங்கடமான வாரம்,

### இடபம்

பொதுப்பணிகளில் மறைமுக எதிர்ப்புண்டு, தொழிலில் எற்ற இறக்கமுண்டு, மனைவி நிலை குறித்து மன வேதனையுண்டு, அதிகாரிகள் வன்மம் தீர்ப்பர், பயணங்கள் திருப்தி தராது, நீண்டநாள் பிணக்கு முடிவுககு வரும், சமாதான வாரம்.

### மிதுனம்

சொல்லும் செயலும் உயர்வைத் தரும், பணநிலை உயர்வு தரும், தொழில் சிறப்புண்டு, காரியசித்தியுண்டு, தெய்வீகப் பணிகளில் நாட்டமுண்டு, அதிர்ஷ்ட வாரம்.

### கடகம்

எதிர்பார்க்கும் காரியம் தாமதமாகும், தொழில் சுமாராக இருக்கும், உறவினர் மூலமான கவலையுண்டு, வீண் செலவுகள் அதிகமுண்டு, குடும்ப உறவு நிலை சுமாராக இருக்கும், வெளியுலக செய்தி ஆறுதலளிக்கும், நன்மை தீமை கலந்த வாரம்.

### சிங்கம்

நண்பர்கள் விரோதமுண்டு, தொழில் பாதிப்புண்டு, குடும்பத்தில் வீண் கவலைகளுண்டு, அதிகாரிகள் உதவி தாமதமாகும், புத்திரர்களுக்கான செலவுண்டு, நிறைவேருத சிந்தனை கவலை தரும், அமைதியற்ற வாரம்.

### கன்னி

எதிர்ப்புக்களை சமாளிக்க வேண்டி வரும், தொழில் அநுகூலமுண்டு, குடும்பத்தில் உள்ளக் குமுறல் அதிகமாகும், காரியஙகள் நிறைவேற்றுவது கஷ்டம், தடைகளும் குறிக்கீடுகளும் காணப்படும், யோசனை அதிகமாகும் வாரம்.

### துலாம்

மேலதிகாரிகள் வெறுப்புண்டு, தொழில் லாபமுண்டு, குடும்பநலன் பேணப்படும், பணநிலை சாதகமாக இருக்கும், கலைத்துறை சார்ந்தவர் உயர்வு பெறுவர், நிர்வாக விடயங்களில் தவறுகள் நிகழும், வேலை பழு உண்டு, மந்தமான வாரம்.

### விருச்சிகம்

தொழிலில் வேகம் இருப்பினும் லாபக்குறைவுண்டு, எதிர்ப்புக்களை சமாளிக்கலாம், பொதுத்துறை பாராட்டுண்டு குடும்பத்தில் மௌனம் நிலவும், பணநிலை பாதிப்படையாது, சகோதரர் கவலையுண்டு. சுபவிரயமுண்டு, அழிவு தரும் வாரம்.

### தனுசு

சுயபலம் குறைந்து காணப்படும், அலைச்சலும் உழைப்பும் அதிகமாக இருக்கும், பிறர் அறிவுரை கவலை தரும், குடும்பத்தில் வேற்றுமை நிலவும், பேச்சினுல் சங்கடங்கள் உண்டு, கொடுக்கல்வாங்கல் திருப்தி தராது, அலைச்சல் நிறைந்த வாரம்.

### மகரம்

பயணத்தடையுண்டு, குடும்பத்தில் அமைதி நிலவும், தொழிலில் சிறப்புண்டு, நண்பர்கள் உதவியுண்டு, பிரச்னைகளை சமாளித்து காரியமாற்றலாம், பணநிலை பாதிப்படையும், நியாயத்துக்கு வாதிடுவீர், சுபவாரம்.

### கும்பம்

புதிய முயற்சிகள் லாபம் தரும், குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு, முதியவர் ஒருவர் உதவிகள் செய்வார், தாயாரின் ஒத்துழைப்புண்டு, தொழிலில் போதிய லாபமுண்டு, இனசன நன்மையுண்டு, பண லாபமுண்டு, கலகலப்பான வாரம்.

### மீனம்

தடைப்பட்ட கருமங்கள் நிறைவேறும், தொழிலில் கணிசமான லாபமுண்டு, அதிகாரிகள் ஒத்துழைப்பு தருவர், திருமணம் சம்பந்தமான கருமங்கள் சிறப்பைத் தரும், பணநிலை அதிகமாக இருக்கும், குடும்ப நிலை அமைதி தரும், அதிர்ஷ்ட வாரம்.

கணிப்பு: ஜோஸ்யர்

# மருத்துவ மன்னன் எலுமிச்சை

மருத்துவம்

எலுமிச்சம் பழத்திலுள்ள குணங்கள் வேறு எப்பழத்திலேயும் இல்லை எனலாம். இதனுலேதான் இது மருத்துவ மன்னன்' என அழைக்கப்படுகிறது. மருத்துவ குணங்கள் மட்டுமன்றி முக்கிய மூலப்பொருள்களும் இதில் அடங்கியுள்ளன.

இந்த எலுமிச்சம்பழம் சாற்றை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் சேமிப்பு நிலையம் போலவும் இருக்கின்றது.

இதனை நாம் எப்பொழுதும் கைவசம் வைத்திருக்க வேண்டும். உயரமான இடங்களுக்கு மேலே செல்லச் செல்ல பிராணவாயு குறைந்து மூச்சுத்திணறல் ஏற்படலாம். அப்பொழுது நம் கைவசமுள்ள பழத்தைக் கடித்து அதன் இரசத்தை உறிஞ்சினுல் காற்றேட்டம் ஏற்பட்டது போன்ற நிலைமை உருவாகும். அத்துடன் காயம் ஏற்பட்ட இடத்திலிருந்து ஒழுகும் இரத்தத்தையும் உடனடியாகக் கட்டுப்படுத்துகிறது.

எலுமிச்சையில் 'சித்திரிக் கமிலம்' இருப்பதால் தொற்று நோய்க் கிருமிகளை உடலில் வளரவிடாது தடுக்கிறது. இந்த சித்திரிக்கமிலம் இருப்பதால் வெறும் ரசமாக உள்ளுக்கு சாப்பிடுவதை அடுத்து வெந்நீரிலோ, தேனிலோ, வேறு பழச்சாறுகளுடனே சாப்பிட உடலுக்கு நலத்தைக் கொடுக்கிறது, உடலிலுள்ள இரத்தத்தைத் தூய்மைப் படுத்துவதுடன், உடல் அசதி, அலுப்பு போன்ற அனைத்தையும் எளிதில் நீக்கிவிடும்.

அவ்வப்போது இந்த எலுமிச்சம் சாற்றை உடலுக்குத் தேய்த்து குளித்து வந்தால் நமைச்சல், அரிப்பு, சொறி, சிரங்கு, கரப்பன், படை முதலிய சரும நோய்கள் நீங்குவதுடன் உடலுக்கு வேண்டிய ஊட்டச்சத்துக்களும் ஒளியும், அழகும் கிடைக்கின்றது.

மலச்சிக்கல். குடல் புண், உடல் உஷ்ணம் நீங்கவேணடுமாயின் காலையில் வெறும் வயிற்றில் பழைய சோற்று (பழஞ்சோறு) நீருடன் எலுமிச்சம் பழச்சாறு சிறிது உப்புச் சேர்த்து அரை தம்ளர் குடித்துவர சுகம் காணலாம். இதேபோன்று அஜீரணம் குறையவும், வாயு வெளியேறவும் ஒரு கரண்டி கறியுப்புடன் எலுமிச்சை ரசம் அளவான நீர் கலந்து குடிக்கலாம்.

கர்ப்பிணிகள் காலையும் மாலையும் எலுமிச்சை ரசத்தை தண்ணீரில் கலந்து அதனுடப் ஒரு கரண்டி தேனையும் சேர்த்து சாப்பிட்டு வரசுகப் பிரசவம் ஏற்படும். இதேபோன்று உடற்பருமனுள்ளவர்கள் எலுமிச்சை ரசத்துடன் தேன், தண்ணீர் கலந்து அருந்தி வர எல்லாம் சரியாகிவிடும். அத்துடன் வாந்தி, பித்தம் நீடித்த மயக்கம் இவற்றைக்கூட கட்டுப்படுத்துகிறது.

இப்பொழுதெல்லாம் நம்மில் அநேகருக்கு இரத்தஅழுத்தம் ஏற்பட்டுவிடுகிறது. இன்னும் சிலர் இரத்த அழுத்தம் இல்லாதிருக்கும்பொழுதே தமக்கு அந்நோய் ஏற்பட்டுவிட்டதாகக்கூட சந்தேகிக்கின்றனர். இப்படிப்பட்டவர்களெல்லாம் நாள்தோறும் மோரில் எலுமிச்சம்பழச் சாற்றைப் பிழிந்து சாப்பிட்டு வந்தால் இரத்த அழுத்தம் குறையும். காது வலியாக இருந்தால் எலுமிச்சை இரசத்துடன் இஞ்சிச் சாற்றையும் கலந்து 2, 3 துளிகள் காதில் விட்டால் போதும் உடன் குணம் தெரியும். அதேபோன்று இரவில் படுக்கப் போகும்போது 2 துளிகள் கண்ணில் விட்டுக்கொண்டு வந்தால் கண்கோளாறு நீங்கி பார்வையும் பளிச்சிடும். இந்த இரசத்தை பஞ்சில் நனைத்து மூக்குத் துவாரத்தில் வைத்தால் மூக்கில் இரத்தம் வடிவது நின்றுவிடும். மூக்கினுள்ளும் 2 சொட்டு விடலாம்.

தலையிலுள்ள பேன்கள் ஒழியவேண்டுமா? உள்ளிப் பூண்டைஒட்டநன்குஅரைத்து எலுமிச்சம் சாற்றையும் கலந்து தலைக்கு தேய்த்து முழுகிவந்தால் தலையிலுள்ள பேன்கள ஒழியும். இதேபோல நெல்லிக்கனியை கொட்டை நீக்கி நன்ருக அரைத்து எலுமிச்சம் சாற்றையும் கலந்து தலைக்குத் தேய்த்துவந்தால் தலைமுடி உதிர்வது நின்று முடி செழிப்பாக வளரும்.

முகப்பருக்கள் வந்து முகத்தினழகைக் கெடுக்கும்போது இந்தச்சாற்றை அழுத்தித் தேய்க்கலாம் அல்லது சாற்றுடன் படிகாரத்தூள்பதமுறக் காய்ச்சிமுகத்தில் தொடர்ந்து பூசிவர பருக்கள் நீங்கி முகம் பொலிவுபெறும். இன்னும் தொண்டை நோய்களையும், இருமல், ஷயம் இருமல், வாதம், சுரம்முதலான நோய் நீக்குகிறது.

எலுமிச்சை இலைகளிலும் மருத்துவ குணம் உண்டென்ருல் மிகையாகாது. இலைகளில் எண்ணெய்க் கோளங்கள் இருப்பதனைக் காணலாம். இதனைக் கிராமத்து மக்கள் விழுதுபோல அரைத்து தலைக்குத் தேய்த்துவருவதனைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்த எலுமிச்சம்பழம் வைத்தியத்தில் காயகற்பக மூலிகையாகப் பயன்படுத்தப் படுகிறது. அதாவது எலுமிச்சம்பழத்தை ரசமும் ஊறுகாயுமாக காயகற்பக முறைப்படி பத்தியமாக உண்டுவரின் நரை, திரை, மூப்பு நீங்கி இளமையுடன் வாழலாம்.

வைத்திய கலாநிதி

நாகேஸ்வரி நாகலிங்கம்

நாட்டின் வரலாறு

# ஜேர்மனி

எல்லை: கிழக்கு போலந்து, தெற்கு செக்.
பரப்பு: 357,000
தலைநகர்: பேர்லின்
தலைவர்: ஹெல்மட்ஹோல்
உத்தி
யோக
மொழி: ஜேர்மன்91%
மக்கள்: துருக்கியர் 2·3% யுக்கோஸ்லாவியர் 1%, இத்தாலியர்: 0·9% கிரேக்கர்: 0·5%, அவுஸ்திரேலியர்: 0·3%, ஸ்பானியர்: 3%, டச்சு: 02%.
நாணயம்: மார்க்
சனத்
தொகை: 77,500,000 1990ல்
கல்வி: 100%
படை: 476,300 1991ல்
உற்பத்தி: அலுமினியம், பிளாஸ்டிக், மிதிவண்டி, பருத்தி, மோட்டார் வண்டி.
அமைப்பு: பல ஏரிகளும் மலைகளும் ஆறுகளும் இங்குள்ளன.

### வரலாறு:

2-ம் உலகப்போரின் பின் ஜேர்மனி 3 ஆகப் பிரிக்கப்பட்டது. ஜேர்மனி ஜனநாயகக் குடியரசு தனியாகவும், கிழக்கு ஜேர்மனி ரஷ்யாவின் கீழும், பேர்லின் 4 நாடுகளின் கண்காணிப்பின் கீழும், இருந்து வந்தன. 3-10-1990ல் இவை மீண்டும் ஒன்ருக இணைந்துகொண்டது. தற்போது ஜேர்மனியில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளமையால் வெளிநாட்டு அகதிகள்மீதான தாக்குதல் அதிகரித்து வருகின்றன.

–ந. பரமேஸ்வரன்

சுவையோ சுவையென நாவில்
சுவை ருசித்திட ஐஸ்கிறீம் வகைகளுக்கு
லிங்கம் குளிர்களி நிலையம் (கூல்பார்)
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
(ஏ 4982)

# உலக ஆயுதச் சந்தையில் அமெரிக்காவின் ஏகபோகநிலை

ரஷ்யா ஈரானுக்கு சில ஆயுதங்கள் விற்பனை செய்ய இருந்த வேளையில் அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் வில்லியம்பெரி அதற்கு எதிராக கருத்துக்கள் வெளியிட்டுள்ளார். உலகத்தில் ஆயுதங்களின் ராஜாவாக அமெரிக்கா என அவர் கருதி இப்படிப் பேசியிருக்கலாம்.

இன்றுஉலகிலே அமெரிக்கா ஆயுதங்கள் உற்பத்தி செய்வதில் முன்னணியில் நிற்கின்றன. 1936-ம் ஆண்டு உலகத்தில் ஆயுத ஏற்றுமதியில் அமெரிக்காவின் பங்கு நூற்றுக்கு பதின்மூன்று வீதமாகும். இன்று நூற்றுக்கு 70 வீதம் அமெரிக்காவின் ஆயுதம் விற்கப்பட்டு வருகின்றன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால்தெரிவிக்கப்பட்டது. வில்லியம் பெலிசின் வெளிநாட்டுப் பயணங்களால் F 16 ரக யுத்த விமானங்களும், ஏ, சி. 130 யுத்தக் கப்பல்களும் அமெரிக்காவால் விற்க முடிந்தது.

பல நாடுகள் தங்கள் நாடுகளுக்கும்அமெரிக்காவின் ஆயுதங்கள் கொள்முதல் செய்வதற்கு 'பென்டகனிடம்' விருப்பம் தெரிவித்துள்ளன.

எகிப்து எம் 60 யுத்த டாங்கிகள் 700ம், இயந்திர துப்பாக்கி 1500ம், இஸ்ரேல் F 15 யுத்த விமானங்கள் 15. சி. எச். 53 ஹெலிகொப்டர் 16ம், M. I. வர்க்க மெசின் கூவக்கு 48,170ம் விலைக்கு வேண்டியுள்ளது.

## உலக வலம்

அமெரிக்க ஜனாதிபதி அமெரிக்காவின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவேன் என்ற வாக்குறுதியின் பேரில் ஜனாதிபதி தேர்தலில் அமர்த்தப்பட்டார். வெள்ளை மாளிகைக்குச் சென்ற அமெரிக்க ஜனாதிபதி, அமெரிக்காவின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கு ஆயுத உற்பத்திதான் ஒரே வழி என்று உற்பத்திக்கு ஆர்வம் காட்டினார்.

இதன் பிரகாரம் F 16 ரக யுத்த விமானங்களும், டீசலில் இயக்கக்கூடிய நீர் மூழ்கிகள், பற்றி அஜென்ரினா, எகிப்து போன்ற நாடுகளுக்கு

இதேவேளையில் மேலும் பல நாடுகள் F 16, A 7, F 4 போன்ற யுத்த விமானங்களுக்கும், A⌐SI ஹெலிகொப்டர், M 60 யுத்த டாங்கிகள் தருமாறு அமெரிக்காவிடம் கேட்டுள்ளன.

கடந்த காலத்தில் ஆயுத உற்பத்தியில் பல மில்லியன் டொலர்களை சம்பாதித்து அமெரிக்க (1988-ம் ஆண்டு 67·9 மில்லியன் டொலர்) கடந்த வருடம் டொலர் 31·9 ஆக குறைந்துள்ளது. இதற்குக்காரணம் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நிகழ்ந்த பனிப்போர் முடிவுக்கு வந்ததாகும்.

1993-ம் ஆண்டுகளில் அமெரிக்கா22·3 மில்லியன்டொலர்களுக்கும், ரஷ்யா 2·8 மில்லியன் டொலர்களுக்கும், பிரித்தானிய 2·3 அமெரிக்க டொலர்களுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதற்கு ஒப்பந்தங்கள் செய்துள்ளன.

இதனுல் அமெரிக்கா தனது ஆயுத விற்பனையை பெருக்குவதற்கு தந்திரமாக ஆயுதங் கொள்முதல் செய்யும் நாடுகளுக்கு இலவசமாக ஆயுதகள் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

இதுவரைக்கும் 2·2 மில்லியன் டொலருக்கு 50 நாடுகளுக்கு இலவசமாக பென்டகன் ஆயுதம் விநியோகித்துள்ளது. மேலும் 86 நாடுகளின் ஆயுத உற்பத்தி பற்றி பிரசாரங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1986 தொடக்கம் 1989 வரை1990 தொடக்கம் 1993 வரை பிரித்தானிய ஆயுத விற்பனையில் 76 வீதமும், ரஷ்யா, சீனு நாடுகள் 68 வீதமும் ஆயுத உற்பத்தியாக குறைந்துள்ளது. இதே நேரம் அமெரிக்காவின் ஆயுத விற்பனை 134 வீதமாக அதிகரித்துள்ளது.

அமெரிக்காவில் உற்பத்தியாகும் ஆயுதங்களில் F 15, F 16, M 1 யுத்த டாங்கிகள் AH 64 யுத்த ஹெலிகொப்டர்கள் ஆகியவை பிறநாடுகளால் விரும்பப்படுகின்றன. 50,000 தொழிலாளர்கள் யுத்த உபகரணங்கள் உற்பத்தியாகும் அமெரிக்க நிறுவனங்களில் தொழில் புரிகின்றூர்கள்.

Northrop என்ற நிறுவனம் தான் அமெரிக்காவில் யுத்த விமானங்களை உற்பத்தி செய்கின்றது.

## சவால் மேடை

### பாட்டியின் பண ஆசை

ஒரு ஊரின் நடுத்தெருவில் ஞானப்பூ என்ற பாட்டி வசித்து வந்தாள் - அவரை அவ்வூர் மக்கள் "நடுத்தெரு ஞானப் பூ" என்று அழைத்து வந்தனர். ஆடு மாடு கோழி வளர்த்தலும் வட்டிக்குப் பணம் கொடுத்தலுமே அவரின் தொழிலாகும். தாய் தகப்பன்அற்ற அவரின் பேரன் பிரான்சிலிருந்து பணம் அனுப்பி வந்தான் ஏராளமான பணத்தைவங்கியிலும்போட்டு வத்தாள் யாருக்கும் பொருளின்றி பணம் கொடுக்க மாட்டாள்அந்த ஞானப்பூபாட்டி—

—ஒரு நாள் அவ்வூரில் மாடு மேய்த்து சீவியம் செய்துவரும் பதுளையைச் சேர்ந்த மாட்டுப் பட்டி வேலவன் நடுத்தெரு ஞானப்பூ பாட்டியிடம் தனது ஊருக்குப் போய் வருவதற்காக பணம் கேட்டான் - ஆனல் பணம் இல்லை என்றாலும் ஐயாயிரம் ரூபாய் தருகிறேன். உனது மாடுகளைக் கொண்டு வந்து தா என்று கூறினுள்- நடுத்தெரு ஞானப்பூ பாட்டியின் பண ஆசையை எப்படியும் அகற்றவேண்டும் என்று எண்ணிய மாட்டுப்பட்டி வேலவன் தன்னிடம் இருந்த மூர்க்கமுள்ள மாடுகளை கொண்டு வந்து கொடுத்து 'பாட்டி இந்த மாடுகள் ஒவ்வொன்றும் ஒருமுட்டி தப்பாது பால் கறக்கும்" என்று கூறி ஐயாயிரம் ரூபாய் பணத்தை பெற்றுக்கொண்டு தனது ஊரான பதுளைக்கு சென்றுவிட்டான்.

அடுத்த நாள் காலையில் நடுத்தெரு ஞானப்பூ பாட்டி முட்டியைக் கொண்டு வந்து மூர்க்கமுள்ள மாடுகளிடம் சென்றுள். ஒவ்வொரு மாடுகளும் பால் எடுக்கமுடியாதவாறு ஒவ்வொரு முட்டியாக தட்டிவிட்டது, முட்டிகளும் உடைந்தன. பாட்டிக்கு பலத்த நஷ்டம்ஏற்பட்டது. பணமும் கரைந்தது. மாடுகளும் மறுநாள் மாட்டுப்பட்டி வேலவன் வீட்டிற்கு ஓடியது. பண ஆசை பிடித்த ஞானப்பூ பாட்டி ஏமாற்றமடைந்தாள பண ஆசையும் அகன்றது.

-வி. பிரான்சீஸ்

### தெரிந்து கொள்ளுங்கள்

1. இலங்கையில் முதலில் யாருடைய உருவம் பொறிக்கப்பட்ட முத்திரை வெளியிட்டப்பட்டது?
2. சிலந்திக்கு எத்தனை கண்கள்?
3. அண்மையில் 1991ல் பிரித்தானியாவில் கலைக்கப்பட்ட வங்கி எது?
4. நொட்ஸ் என்றால் என்ன?
5. வடதமிழ் ஈழத்தில் அதிக அளவில் நெல் விளையும் இடம் எது?
6. உலகில் மிகக் கூடிய இராணுவம் எந்த நாட்டில் உள்ளது?
7. தமிழ் ஈழ தேசியக் கொடி வணக்கப் பாடலை எழுதிய கவிஞர் யார்?
8. கடந்த 400 ஆண்டுகளாக மழை கிடைக்காத இடம்?
9. உலகிலேயே பெண்களுக்கு கட்டாயப் படை பயிற்சி அளிக்கும் நாடு?
10. சுப்பசோனிக் என் பதன் பொருள் யாது?

விடைகள்:

1. விக்டோறியா மகாராணியின் உருவம் பொறிக்கப்பட்டது. 2. எட்டுக் கண்கள். 3. B. C. C. T, வங்கி. 4. கடலில் கப்பல் அல்லது படகு போன்றவற்றின் வேகம் அளிக்கும் கருவி. 5. கிளிநொச்சி. 6. சீனுவில் 46 லட்சம் இராணுவ வீரர்கள். 7. கவிஞர் புதுவை இரத்தினதுரை 8. சிசிலி நாட்டிலுள்ள அட்டகாம பாலநிலப்பகுதி. 9. இஸ்ரேல். 10. ஒலியின் வேகத்தை விட மிஞ்சிய வேகத்தில் பறக்கும் விமானம்.

கமலநாதன் ஜெயகயன்
ஓட்டுமடம்
யாழ்ப்பாணம்.

## முப்பது மில்லியன்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இவ்வாறன தற்செயலான 'நுண்ணுயிர்க் கலப்பு' நிகழாவண்ணம் மிகவும் அவதானமாக இந்த ஆய்வினை அவர் திட்டவட்டமாக மேற்கொண்டாகத்தெரிவிக்கிறார்.

புராதன காலத்து (Jurassic Era) வெப்பவலயக் காடுகளில் உயிர்வாழ்ந்த தேனீக்களிலிருந்து இவ்வகை பாக்டீரியாவை கண்டுபிடித்ததாக ஜே. கேனே சொல்கிறார். மில்லியன் கணக்கான வருடங்களுக்கு முன் அம்பர் என்ற பொருளால் மூடப்பட்டுக் கிடந்த இத்தேனீக்களின் வயிற்றிலிருந்து இயக்கமற்ற இவற்றைப் பிரித்து எடுத்திருப்பதாக அவர் மேலும் சொல்கிறார். (அம்பர் என்பது பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்படும் மஞ்சள் நிறம் கொண்ட ஒருவகைப் பிசின் போன்ற கனிப்பொருள்.)

டாக்டர் கேனே அம்பர் ஜீன் என்ற மருந்து தயாரிப்பு நிறுவனத்தை கலிபோர்னியாவில் சான்கார்லோஸ் என்ற இடத்தில் ஆரம்பித்திருக்கிறார். இந்நிறுவனத்தின் நோக்கம் மிகத் தொன்மையான ஜுராஸிக் யுக நுண்ணுயிர்களிலிருந்து நோயெதிர்ப்புச் சக்திகொண்ட மருந்துகளைத் தயாரிப்பதாகும்.

அந்தக்கால ஜுராஸிக் பாக்டீரியா இப்போதைய அன்டிபயோடிக்ஸ் (Antibiotics- பாக்டீரியா போன்ற நுண்ணுயிர்களிலிருந்து தயாரிக்கப்படும் நோயெதிர்ப்பு மருந்து) களை அவற்றின் வாழ்நாளில் சந்தித்திருக்க முடியாது. இக்காரணத்தால் ஜுராஸிக் பாக்டீரியா Anti. biotics களை எதிர்க்கும் சக்தியை[Immunity] அபிவிருத்தி செய்திருக்கமுடியாது. எனவே ஜுராஸிக் பாக்டீரியாவிலிருந்து தயாரிக்கப்படும் Antibiotics களை இக்காலத்திய பாக்டீரியாக்களுக்கு எதிராகப் பயன்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மில்லியன் கணக்கான வருடங்கள் பழமை வாய்ந்த உயிரியல் இழையம் ஒன்றிலிருந்து உடல் கட்டமைப்பின் ஆதார அலகு எனப்படும் DNA மூலக்கூற்றினை விஞ்ஞானிகள் வேறுபடுத்தி வைத்திருக்கின்றனர். ஆயினும் இம் மூலக்கூற்றிலிருந்து முழு அங்கியை ஆக்கி விடமுடியாது என்பது அவர்கள் கருத்தாகும்.

மேலும் பக்டீரியாபோன்ற வேறு ஒரு கல அங்கிகள் சிக்கலானதாகவும் கால நீடிப்புக்குப்பணிந்து சிதைந்துஅழிகின்றனவாகவும் உள்ளன. அத்துடன் கடுமையான வெப்பநிலை மாற்றம் இரசாயனத் தாக்கம் நொதியங்களின்தாக்கம் என்பனவற்றுக்கு நிச்சயமாக உட்படுகின்றன.

ஆயினும் பக்டீரியா சில விதிவிலக்கான விசேட குணும்சங்களைக் கொண்டதென விஞ்ஞானிகள் அறிவர். இச்சிறப்பம்சங்கள் அவற்றை கடும்பாதக சூழ்நிலைகளில் பாதுகாக்கின்றன. இவ்வேளைகளில் அவை தம்மைத்தடித்த புரதப்போர்வை ஒன்றால் மூடிக்கொள்கின்றன. மூடியபின் உடலியல் இயக்கங்களை முற்றிலும் நிறுத்தி ஒருவகை தூக்க நிலைக்குத் தயாராகின்றன. இந்நிலையில் அவை Spores என அழைககப்படுகின்றன. இந்த பக்டீரிய Sporesகளைத்தான் அம்பர்ஜீன் உயிரியலாளர்கள் வெளியே எடுத்து இயக்கம் கொடுத்துள்ளனர். தாங்கள் உருவாக்கியவற்றுள் பெரும்பான்மையானவை மண்ணிலும் பூச்சிகளிலும் சாதாரணமாகக் காணப்படும். தீங்கற்ற பக்டீரியாவான Bacillus Sphaericus உடன் ஒத்தவை என இவர்கள் கூறுகின்றனர்.

— ஆதாரம்: 'ராய்ட்டர்'

★ கண்ணைக் கவரும் வர்ண சாறிகளுக்கும் பிடவைத் தினுசுகளுக்கும் ஐவுளிக்கடல்
★ திருமண பட்டுப் பிடவைகளுக்கு பெயர் பெற்றவர்கள்.

திருமாட்டி பிடவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

(ஏ-4985)

## நாடுகளும் பாராளுமன்றங்களும்

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | - | காங்கிரஸ் [செனட் சபை, பிரதிநிதிகள் சபை] |
| ஆப்கானிஸ்தான் | - | ஷோரா |
| பிரிட்டன் | - | பாராளுமன்றம், [மக்கள சபை] |
| சீனு | - | தேசிய மக்கள் காங்கிரஸ் |
| டென்மார்க் | - | போல்கெட்டிங் |
| இந்தியா | - | பாராளுமன்றம், [லோகசபை, ராஜ்யசபை] |
| ஈரான் | - | மஜ்லிஸ் |
| இஸ்ரேல் | - | நெஸட் |
| ஜப்பான் | - | டயட் |
| லிபியா | - | பொதுமக்கள் காங்கிரஸ் |
| நியூஸிலாந்து | - | பிரதிநிதிகள் சபை |
| சுவீடன் | - | ரிக்ஸ்டாக் |
| சுவிட்ஷர்லாந்து | - | பெடரல் அசெம்பிளி |
| நேபாளம் | - | தேசிய பஞ்சாயத்து |
| அவுஸ்திரேலியா | - | பெடரல் பாராளுமன்றம் |

### உலகின் ஏழு அதிசயம்

பிரமிட்டுக்கள்
தொங்கு பூந்தோட்டம்
மாசோல்ஸ் மன்னன் கல்லறை
டயானு கோவில்
ஒலிம்பியா கிப்பிட்டர் சிலை
அலெக்சாந்திரியா கலங்கரை விளக்கம்
ரேட்ஸ் பேருவச்சிலை

— விஷ்ணுகாந்தன்
ஆண்டு 10
யாழ். இந்துக் கல்லூரி

நல்லூர் இளை நூலகம்.



ஆண்டு-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு

# தனியார் பாடசாலை மாணவர்கள் தோற்றுவதற்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

கொழும்பில் தனியார் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவரை ஐந்தாம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சையில் தோற்ற பாடசாலை நிர்வாகங்கள் அனுமதி மறுத்துள்ளதால் பெற்றோர் மத்தியில் பெரும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வருடம் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்கே மாணவர்களை தோற்ற அனுமதிப்பதில்லை எனபலதனியார் பாடசாலைகள் முடிவுசெய்துள்ளன. கொழும்பு சென். பீற்றர்ஸ், சென். ஜோசப் குட் செப்பட் கொன்வென்ற் உட்பட பல பாடசாலைகளே இவ்வாறு முடிவு செய்துள்ளன.

இதை வன்மையாக கண்டித்துள்ள பெற்றோர் பாடசாலைகளின் இந்த முடிவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அறிவித்துள்ளனர். இது குறித்து கல்வி அமைச்சின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளதுடன் இது மாணவரின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி கல்விஅமைச்சின் மேலதிக செயலாளர் திரு. ஜி தயகரட்ன கூறுகையில் இந்த மாணவரும் இப் பரீட்சையில் தோற்றும் உரிமை உண்டு இதனை தடுப்பது அநீதியான செயலாகும் என்றார். -சி

## வாளிகள், ரயர்கள் விநியோக ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவு சங்கம் கொழும்பிலிருந்து யாழ் யாவட்ட விவசாய உற்பத்தி விற்பனவு நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட வாளிகளை சங்க கிளைகள் ஊடாக சங்க அங்கத்தவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஒரு குறிப்பிட்ட தொகை சைக்கிள் ரயர்கள் மட்டுமே கையிருப்பில் இருப்பதால் அதனை பெறுவதற்கும் சங்க அங்கத்தவர்கள் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது 72

## பயிற்சி வகுப்பு

(உடுவில்)

க. பொ த உயர்தர வகுப்பு ஆசிரியர்களுக்கான பௌதிகவியல், இரசாயனவியல் பாட சேவைக்கால பயிற்சி வகுப்புக்கள் நாளை 12 ஆம் திகதி திங்கட்கிழமை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல கோட்டங்களிலும் சுருக்கெழுத்து தட்டெழுத்தும், வடமராட்சிக் கோட்டத்தில் நடன, சங்கீதப் பாட பயிற்சி வகுப்புகளும், உடுவில், பருத்தித்துறை கோட்டங்களில் சமூக கல்விப் பயிற்சி வகுப்புகளும் நடைபெறவுள்ளன. (109)

இந்துக்களின்

## ஆர்ப்பாட்ட பேரணிக்கு ஆதரவு பெருகுகிறது

(உடுவில்)

இந்து மக்களுக்கு எதிராக அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை எதிர்த்தும் ஆறு கோரிக்கைகளை முன்வைத்தும் இந்து சமயப் பேரவையினால் இம் மாதம் 15 ஆம் திகதி வியாழக்கிழமை நடத்தப்பட உள்ள மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு இந்து மக்களின் ஆதரவு அதிகரித்து வருகிறது.

இது சம்பந்தமாக பேரவையினர் பிரதேச செயலகங்களில் நடத்திவரும் பிரசார நடவடிக்கைகளுக்கு பெருந்தொகையான மக்கள் கூடி ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்துக் குருமார்கள், இந்து சமய சபைகள், சங்கங்கள் இந்துக் கோவிலின் தர்மகர்த்தாக்கள், பரிபாலன சபையினர் மற்றும் பொது ஸ்தாபனங்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பலரும் இப் பேரணியில் கலந்துகொள்ள ஆர்வம் தெரிவித்து வருகின்றனர்.

ஊர்வலத்தின் நோக்கங்களை எடுத்து விளக்கும் பிரச்சார கூட்டங்களை பேரவையினர் பிரதேச செயலக பகுதிகளில் நடத்தி வருகின்றனர். கடந்த வாரத்தில் இவ்வாறான கூட்டங்கள் சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய், தென்மராட்சி, கரவெட்டி போன்ற இடங்களில் இந்து சமய பேரவையினரால் நடத்தப்பட்டன. 109 - சி

## எல்லைப்புற கிராமங்களிலிருந்து சிங்களவர் வெளியேற்றம்

### பாடசாலைகளும் மூடப்பட்டன

(அநுராதபுரம்)

வடக்கு கிழக்கு எல்லைப்புற கிராமங்களை சேர்ந்த சிங்களவர் தமது பகுதிகளை விட்டு தினமும் நூற்றுக்கணக்கில் வெளியேறிக்கொண்டிருப்பதாகவும் எல்லைப்புற கிராமங்களிலுள்ள சிங்கள பாடசாலைகள பல மூடப்பட்டுவிட்டதாகவும் 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது. அச்சம் காரணமாகவே இவர்கள் வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். பாதுகாப்பான இடங்களை நோக்கிச்சென்று கொண்டிருக்கும் இவர்கள் கூறுகையில் மே மாதம் 26ம் திகதி திம்புலாகல தேரர் சுட்டுக் கொல்லப்பட்ட பின் எல்லைப்புற கிராமங்களில் அச்சமும் பீதியும் பரவத் தொடங்கியது.

திம்புலாகல தேரர் எம்முடன் இருக்கையில் எமக்கு எதுவித பயமும் இருக்கவில்லை ஒவ்வொரு கணமும் எமக்கு தேவையான பாதுகாப்பு, உணவு, சுகாதாரம், நிலம் உட்பட சகல தேவைகளையும் பூர்த்தி செய்து வந்தார். ஆனால் தற்போது அவரைப் போல எமக்கு தலைமை தாங்கக் கூடிய ஒருவர் இங்கு இல்லை.

எனவே இங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை

தற்போது எல்லைப்புறக்கிராமங்களான மில்லான, மகுல்தமான, மகாதம்மன்ன பின் பொக்குண, பல்தியாவ, திம்புலாகல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தோரே அப்பகுதிகளில் இராணுவ முகாம்கள் இருக்கின்ற போது அச்சம் காரணமாக வெளியேறுகிறார்கள்

இதேவேளை புல்மோட்டை குச்சவெளியைச் சேர்ந்த 170 சிங்களக் குடும்பங்களும் இங்கிருந்து வெளியேறி ஹொறவப்பொத்தானை, ஹெப்பிற்றிகொலாவ, கெக்கிராவ பகுதிகளுக்கு சென்றுள்ளன.

இப்பகுதிகளில் இராணுவம் நிலைகொண்டிருப்பதால் மக்கள் அச்சமடையத் தேவையில்லை என இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார் -சி

## நோய் கொடுமை வயோதிபர் தற்கொலை

[நெல்லியடி[

நோயின் கொடுமையினால் நஞ்சு குடித்த வயோதிபர் ஒருவர் மந்திகை மருத்துவமனையில் மரணமானார்.

சரணவாய் மேற்கு கல்லுவத்தையைச் சேர்ந்த சுந்தரம் சின்னத்துரை (வயது71) என்னும் வயோதிபரே மரணமடைந்துள்ளார்.

இதுசம்பந்தமாக மரண விசாரணையை நடாத்திய உடுப்பிட்டிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வி, நடராஜா தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். 160

## அத்தியாவசிய

(3-ம்பக்கத் தொடர்ச்சி(

வுகளை வைத்திருக்கின்றன இந்த உறவு சிறிலங்காவிற்கு மறைமுகமாக இந்தியா உதவுவதற்கு வழிவகுக்கிறது.

இந்த நிலையில் இந்திய கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி சென்னையில் பத்திரிகையாளரிடம் பேசுகையில் பாக்கு நீரிணையில் புலிப் போராளிகளின் நடமாட்டத்தை முற்றாக கட்டுப்படுத்துவது சிரமமாக இருக்கிறது, அதற்குக்காரணம் 150 கிலோ மீற்றர் கரையோரத்தையும் இந்திய கடற்பரப்பையும் ரோந்துசெய்வது பாரிய பணியாக இருக்கிறது என்று கூறியுள்ளார். தளபதியார் தானாக, ஏதேச்சையாக புலிகளைத்தேடி அலைகிறாரா? இல்லை. இந்திய அரசின் கட்டளைப்படியே அவர் கருமமாற்றுகிறார். இது சிறிலங்கா அரசுக்கு இந்தியா செய்யும் நேரடி உதவி இல்லாமல் வேறென்னவாக இருக்க முடியும்?

## தீயசக்தி

விடுதலைப் புலிகளுக்கு இராணுவ தந்திரோபாயங்களை அமைச்சர்கள்கூட வழங்கி விடுவார்கள் என்று அமைச்சரவையில் சந்தேகம் எழுந்துள்ளதாம். கடந்த புதன்கிழமை ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் அமைச்சரவை கூடிய போது யுத்தம் பற்றி அங்கு முக்கியமாக ஆராயப்பட்டாலும் யுத்த தந்திரோபாயங்கள் குறித்து ஆராயப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதுபற்றி சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கூறுகையில் அமைச்சரவையில் யுத்த தந்திரோபாயங்கள் ஆராயப்படவில்லை என்றும் அதற்குக் காரணம் அமைச்சரவைக்குள் இருக்கும் சில சக்திகள் விடுதலைப் புலிகளுக்கு இரகசியங்களை வெளியிடமுடியும் என்பதாலேயே அவ்விதம் ஆராயப்படவில்லை என்று குறிப்பிட்டார். அமைச்சரவையில் யுத்தம் சம்பந்தமாக ஆராயப்பட்டபோது அனுருத்த ரத்வத்தை இராணுவ தந்திரோபாயங்கள் அனைத்தும் பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் அவை பற்றி ஜனாதிபதி சந்திரிகா பின்னர் அறிவிப்பார்என்றும் கூறினாராம். இந்த தீய சக்தியார்? ஐ. தே. க.வினாலும் சுதந்திரக் கட்சியினாலும் சந்தேகக்கண்ணுடன் நோக்கப்படும் தொண்டமானா? அல்லது வேறு யாராவது அமைச்சரவைக்குள் பதுங்கி உள்ளார்களா?

## உதவிப்பணம்

(கொழும்புத்துறை)

யாழ் பிரதேசசபைச் செயலாளர் பிரிவில் தற்போது மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கு கடந்த சித்திரை மாதத்திற்கான உதவிப்பணம் இப்பிரதேச சபைச் செயலாளர் பகுதியில் உள்ள சகல தபால் அலுவலகங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது. -154

## கழிவுப் பொருட்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கழிவு நீர் அகற்றுவது நகரத்தில் முக்கியமான பணி. அதற்கு ஓர் இயந்திரத்தை வடிவமைத்து உருவாக்கியிருக்கிறோம். இதற்கு ஏற்பட்ட செலவு 45,000 ரூபா வேண்டும். வெளியில் என்றால் ஒரு லட்சம் ரூபாவேண்டும். இந்த இயந்திரத்தை வாகனத்தோடு வேண்டுவதென்றால் இரண்டு லட்சம் ரூபாவுக்கு மேல் தேவைப்படும்.

பல சிறிய தண்ணீர் டாங்கிகள் உருவாக்கியுள்ளோம். இந்தச் சிறிய தண்ணீர்த் தாங்கிகள் மூலம் மக்களுக்கு தண்ணீர் வழங்கி வருகின்றோம்'' என்று குறிப்பிட்டார்.

எமது பிரதேசத்து நிறுவனங்கள் மாநகரசபைபோன்று பல தொழில்பட்டறைகளை உருவாக்கி மக்களுக்குத் தேவையான வெவ்வேறு விதமான பொருட்களை உருவாக்கினால், எமது தமிழீழத்துக்கான பல பொருட்களின் சுய தேவைகளைக் கூடியளவு பூர்த்திசெய்யலாம் என்ற நினைவுடன் அந்தத் தொழில் பட்டறையில் இருந்து வெளியேறுகின்றேன்.

## இன்று முதலுதவிப் பயிற்சி

(கொழும்புத்துறை)

யாழ். சென். யோன்ஸ் அம்புலன்ஸ் ஆதரவில் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர்சங்க உறுப்பினர்களுக்கு முதற் தடவையாக அவர்கள் பணிமனையில் கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் ''முதலுதவிப் பயிற்சி வகுப்புக்கள்'' நடாத்தப்பட்டு வருகிறது.

## டோக்கியோ

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன்பின்பே இவரும் இவரது மனைவியும் ஓம் என்னும் பெயரில் யோக வகுப்புக்களும் நடத்தி மூலிகைக் குடிவகைகளும் விற்கத்தொடங்கினார்கள 1987ல் இமய மலைக்குச் சென்று திரும்பிய பின்புதான் ஞானநிலை அடைந்துவிட்டதாகக்கூறி ஓம்சினறிக்கோ அமைப்பைஆரம்பித்து தனது அமைப்புக்கு அங்கத்தவர்களைச் சேர்க்கலானார். 10,000க்கு மேற்பட்ட சீடர்கள் சேர்ந்தார்கள். தனது அமைப்பை விரிவுபடுத்தி நியூயோர்க்' மொஸ்கோ, சிறிலங்கா ஆகிய இடங்களிலும் கிளைகளை ஆரம்பித்தார். இவரது அமைப்பில் பல விஞ்ஞானிகள், வைத்தியர்கள், ஒரு றொக்கட் விஞ்ஞானி எனப் பலர் சேர்ந்து கொண்டார்கள்.

இவர்களதுபயங்கரவாதநடவடிக்கைகள் அம்பலத்துக்கு வந்ததையடுத்து இவர்களில் பலர் தற்போது கைதாகிவருகிறார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர்
அ. துரைராஜா
அவர்களது
முதலாவது
நினைவாஞ்சலிக்
கூட்டம்

காலம் :
13 - 06 - 1995
செவ்வாய்க்கிழமை
பி. ப. 02-30 மணி

இடம் :
யாழ். பல்கலைக்கழக
கைலாசபதி கலை அரங்கு

தலைவர் :
பேராசிரியர்
க. குணரத்தினம்
துணைவேந்தர்,
யாழ். பல்கலைக்கழகம்.



★ அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

நிகழ்ச்சி அமைப்பாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(ஏ-4991)

# பொதுநல அமைப்பு சட்டம் மூலம் குற்றவாளிகளை நாடுகடத்தலாம்!

(லண்டன்)

பொதுநல அமைப்பு அங்கத்துவ நாடுகள் மத்தியில் குற்றவாளிகளை நாடுகடத்துவதற்கு பொதுநல அமைப்பில் நாடுகடத்தல் உடன்படிக்கை போதுமானது என பிரிட்டன் கூறியுள்ளது

பிரிட்டிஷ் வெளியுறவு துணை அமைச்சர் திரு. ரெனி போல்றியிடம், இலங்கையில் குற்றச் செயல்கள் புரிந்துவிட்டு தற்போது பிரிட்டனில் இருக்கும் இலங்கையர்களை நாடு கடத்த முடியுமா எனக் கேட்டபோது—

இலங்கையில் உள்ள நீதிமன்றம் ஒன்றில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட எவரையும் நாடு கடத்துவதற்கு பொதுநலவாய நாடு கடத்தல் உடன்படிக்கை போதுமானது. எனவே இதில் எவ்வித சிரமமும் கிடையாது எனத் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு லக்ஷ்மன் கதிர்காமரை சந்தித்த பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் திரு. டக்ளஸ் ஹேட் புலிகளின் நடவடிக்கையை பிரிட்டன் உன்னிப்பாக அவதானிப்பதாகவும் புலிகளின் அலுவலகங்களை பிரிட்டன் மூடாது எனவும் தெரிவித்துள்ளார். -சி

# வானொலி அனுமதிப்பத்திரம்; கால எல்லை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வானொலி அனுமதிப் பத்திரங்களை வழங்குவது தொடர்பாக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கால எல்லை பொதுமக்களின் நன்மை கருதி மறுஅறிவித்தல்வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது நடைமுறையிலுள்ள வகையில் உள்ளூராட்சி மன்றங்களின் தலைமை அலுவலகங்களில் அல்லது தமிழீழ நிர்வாக சேவையின் உள்ளூராட்சிப்பகுதியில் விண்ணப்பப படிவங்களைப் பெற்று குடும்பப்பதிவு அட்டைகளுடன் சமூகம்தருவதின்மூலம் அனுமதிப்பத்திரங்களைப் பெற முடியுமென தமிழீழ நிர்வாக சேவை அறிவித்துள்ளது.

வானொலி திருத்த உரிமையாளர்கள் ஏற்கனவே அறிவித்திருந்தமைக்கு அமைவாக அனுமதிப் பத்திரங்களில்லாத வானொலிப் பெட்டிகளைப் பொறுப்பேற்காது ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (சி)

# நாடாளுமன்ற கட்டிடம் மீது 'கார்குண்டு' தாக்குதலுக்கு திட்டம்!

(கொழும்பு)

நாடாளுமன்ற கட்டிடத்தை கார் குண்டு வெடிப்பு மூலம் தகர்க்க விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருவதாக இராணுவ புலனாய்வுத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

இதையடுத்து நாடாளுமன்றக் கட்டிடத்தின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன் நாடாளுமன்ற கட்டிடத்தினுள் நுழைவோரின் அளவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் வரும் தனியார் வாகனங்கள் கட்டிட வளாகத்திற்கு வெளியே நிறுத்தப்படும். பத்திரிகையாளர்கள், ஊழியர்களின் வாகனங்கள்கூட இந்த விதிமுறைக்கு ஒழுகவே வெளியே நிறுத்தப்படும். படையினரின் வாகனங்கள் மூலம் இவர்கள் உள்ளே அனுமதிக்கப்படுவர்.

அமைச்சர்கள் வாகனங்களில் உட்செல்ல அனுமதிக்கப்பட்டாலும் அவர்களின் வாகனங்கள் மிக கடுமையான சோதனைக்குட்படுத்தப்படும். நாடாளுமன்றத்தினுள் நுழையும் ஒவ்வொருவரும் உடல் முழுவதும் சோதனையிடப்பட்ட பின்பே அனுமதிக்கப்படுவர். நாடாளுமன்ற கட்டிடத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஆயுதம் தரித்த படையினர் பலத்த காவலில் ஈடுபட்டுள்ளனர் -சி

## தொலைபேசி செயலிழப்பால்
# கப்பல்களின் வருகை
## அறியமுடியாதுள்ளது

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து வடபகுதிக்கு உணவுப் பொருள்களை ஏற்றிவரும் கப்பல்கள் எப்போதுஇங்கு வந்துசேரும் என்பது பற்றிய தகவல்கள் பெறமுடியாது செயலக அதிகாரிகள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

வடபகுதிக்கு உணவுப் பொருள்களை ஏற்றிவரும் ''லங்கா முடித்த'' ''குமண'' ஆகிய கப்பல்கள் எப்போது பருத்தித்துறையை வந்தடையும் என்பது பற்றிய தகவல்கள் இதுவரை செயலக அதிகாரிகளுக்கு கிடைக்கவில்லை.

செயலக தொலைபேசி நேற்றுடன் நான்காவது நாளாக இயங்கவில்லை. தொலைபேசி தொடர்பு துண்டிக்கப்பட்டதால் கொழும்பில தங்கியிருக்கும் அரச அதிபரின் தகவல்களும் செயலகத்திற்கு கிடைக்கவில்லை.

இதேவேளை தொலைபேசித் தொடர்பு துண்டிப்பு தொடர்பாக கொழும்பிலிருக்கும்யாழ். அரச அதிபருக்கு யாழ். செயலகம் அறிவித்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (170-சி)

# வெளிநாடுகளில் உள்ள புலிகளை கண்காணிக்க இலங்கை கோருகிறது

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை கண்காணிக்குமாறு இலங்கை அரசு உலக நடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது

ஐரோப்பிய நாடுகள் உட்பட பல நாடுகளில் விடுதலைப் புலிகளின் அமைப்புகள் செயற்படுவதினால், இந்த நாடுகளில் விடுதலைப் புலிகள் சட்டத்துக்கு முரணாக செயற்படுகின்றார்களா என்பதை கவனத்தில் கொண்டு கண்காணிக்கவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளிநாடுகள் செயலபட்டால், விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராடும் இலங்கை அரசுக்கு இவை உதவும் என்றும், இலங்கை தனது வேண்டுகோளில் கேட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப் புலிகளின் காரியாலயங்கள் பல இயங்கி, இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதாகவும் இதற்காகத்தான் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை கண்காணிக்குமாறு இலங்கை அரசாங்கம் பிறநாடுகளை கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -வி-ம-சி

## 'நரோமா' நாளை வராது

(கொழும்பு)

திருமலையிலிருந்து நாளை திங்கட்கிழமை பருத்தித்துறை நோக்கி புறப்படுவதாக இருந்த 'நரோமா' கப்பலின் வருகை பிற்போடப்பட்டுள்ளது.

கப்பலில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாகவே நரோமா வருகையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாம். இக்கப்பல் சேவை மீண்டும் எப்போது நடைபெறும் என்பது பற்றி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## இன்று

(யாழ்ப்பாணம்)

திருக்குடும்ப கன்னியர் சபையின் 175 வது ஆண்டு விழா இன்று அதன் பணித்தளங்கள் யாவிலும் கொண்டாடப்படவுள்ளது இவ்விழா இன்று யாழ் ஆயர் தலைமையில் யாழ் பிரதான வீதியில் உள்ள மாகாண இல்லத்தில் நடைபெறவுள்ளது.

## போலி பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுச் சென்ற இலங்கையர்களே இதனை பெற்றுச் சென்றுள்ளனர். பல நாடுகளிலும் தொழில் வழங்குவோர் இவர்களின்பட்டங்கள் குறித்து இலங்கையுடன் தொடர்கொண்டு கேட்டபோது சான்றிதழ்கள் பரிசோதிக்கப்பட்டபோதே சில போலிப் பட்ட சான்றிதழ்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

மருதானை அச்சகத்தைச் சுற்றிவளைத்த பொலிசார் அங்கிருந்து நால்வரை கைதுசெய்ததுடன் போலி பட்ட சான்றிதழ்களையும் கைப்பற்றியுள்ளனர். —சி

வளவுக்கு வேலியிடு
பயிரைக் காப்பாற்றலாம்,
வாய்க்கு நீ வேலியிடு
தேசத்தைக் காப்பாற்றலாம்.

## இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பலாலி வீதியில் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட லொறி விபத்தொன்றில் படுகாயமடைந்த 30 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு உட்படுத்திய சமயம் மரணமானார்.

இவரின் சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ் ஆஸ்பத்திரியில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. 90-170-சி

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம், விளையாட்டுக்கழகங்களிடையே நாவாந்துறை சென். நீக்கிலஸ் கழக மைதானத்தில் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டியில், இன்றைய ஆட்டங்களின் விபரம்:

தொடர்மாடி சென். லூட்ஸ் கழகம் எதிர் உதயசூரியன் கொய்யாத்தோட்டம் ஐக்கிய கழகம் எதிர் சென். மேரிஸ் வைக்கிங்ஸ் எதிர் அறிவொளி மோதும். வி-சி

## பலாலியில் மோதல்
# சிப்பாய் பலி

(கொழும்பு)

பலாலி பகுதியில் முன்னணி காவலரண் ஒன்றில் நேற்று முன்தினம் படையினருக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற மோதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

கூட்டமாக வந்த விடுதலைப் புலிகள் காவலரணைத் தாக்கிய போதே இந்த சிப்பாய் கொல்லப்பட்டதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்படுகிறது:

இதேவேளை நேற்று முன்தினம் மன்னார் தாழ்வுப்பாடு பகுதியிலும் புலிகளுக்கும் படையினருக்குமிடையில் மோதல் நடைபெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## பொசன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிட்டு இங்கு ஆயிரக்கணக்கான சிங்களவர் போய் சேர்ந்தவண்ணமுள்ளனர்.

இவர்களின் பாதுகாப்பை முன்னிட்டே ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டு அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. -சி

## வடமராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியில் உள்ள றோ. க. தொடக்க நிலைப் பாடசாலை மைதானத்தில் மூன்று குண்டுகளைப் பொழிந்தது. இவற்றில் இரு குண்டுகள் வெடித்துச் சிதறின ஒரு குண்டு வெடிக்கவில்லை.

அவ்வேளை பாடசாலை மைதானத்தினூடாக, தனது பேரனுடன் சென்றுகொண்டிருந்த குடாரப்பு வடக்கைச் சேர்ந்த பிலிப்பு மேரிஆரோக்கியம் (வயது 65) என்னும் மூதாட்டியே கையில் படுகாயமடைந்தார். இவரது பேரனுக்கு தெய்வாதீனமாக காயம் எதுவும் ஏற்படவில்லை. -160 சி

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் இராணுவமுகாமில் இருந்து நேற்று பிற்பகல் 2 மணிக்கு பொன்னாலை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பொன்னாலை கிருஷ்ணன் கோவிலை அண்டிய பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. 90-சி

## நீரிழிவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞானிகள் நீரிழிவு நோய் கண்ட மனிதரிடமிருந்து இன்சுலின்சுரக்கும் அணுக்களை பிரித்தெடுத்து அவற்றை இன்சுலினை சுரக்கவைத்து பரிசோதனைச்சாலையில் வெற்றி கண்டுள்ளனர். ஆனால் அதனை இன்னும்நோயாளியின் உடலில் பொருத்திப் பாவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். (சி)

## கொழும்பிலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டால் அவர்களை உடனடியாக கைதுசெய்கின்றார்கள்.

கடந்த ஒரு வாரத்தில்மட்டும் கொழும்புக் கோட்டை ரயில்நிலையத்தில் மட்டும் 50க்கும் அதிகமான தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்று செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (வி-சி)

விஜே நகைப் பூங்கா
185, சந்தோசம் தெரு, [கஸ்தூரியார் வீதி]
யாழ்ப்பாணம்.
தங்க வைர நகை வியாபாரம்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
22 கரட் தங்க நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
(ஏ-4983)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு யூன் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News peper at General Post office adLnɣ ɐnɔeɔLunSrr ciie Number B / 1633613.